251

251

சாம் 4

எது வேண்டும்?

# சுயராஜ்யமா? — — —
# — — சமதர்மராஜ்யமா?

மூன்றும் பாகம்

உலக முக்கிய பிரச்னே,
தேசியமும் மூடநம்பிக்கையும்,
சுயராஜ்யமும் தனிசொத்துரிமையும்,
சமதர்ம லக்ஷணம்,
சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, ...
அரசு இருக்கா.
சமதர்ம ஆட்சி முறை,
ஜாதி மதம் ஒழிக்கும் வழி,
தனிவுடமையின் கொடுமை,
பொதுவுடமை விளக்கம்,
சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம்,
சுயராஜ்யமா? சமதர்மராஜ்யமா?

OFFICE OF THE REGISTRAR OF C...
12 APR 1934
MADRAS

ஆசிரியர்
தோழர் M. சிங்காரவேலு, பீ. ஏ., பி. எல்.,

சென்னை கிருஷ்ணம்பேட்டை,
ஞானபண்டிதர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1934

[விலை அணு 3.

R34
M34.3
171785

# சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?
# (Swaraj to whom?)

## சுயராஜ்யம் யாருக்கு?
### மூன்றும் பாகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 APR 1934
MADRAS

## முதல் அத்தியாயம்.

### சுயராஜ்யமும், தேசீயமும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? இந்த பிரச்னைக்குக் கொடுக்கும் விடையில் தான், 160 கோடி உலகமக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன. இந்த விடையில்தான், 35 கோடி இந்திய மக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன. It is in the solution of this problem, whether what is wanted is Swaraj or Socialist Raj, lies the happiness or misery of 1600 millions of the human race. It is in answer to this that the happiness or misery of the 350 millions of the Indian people lies. In fact, this is the crux of the Indian Problem:—இது தான் மனிதப் பூண்டின் முக்கிய பிரச்னை.

2171785


## சுயராஜ்ய மென்றால் என்ன ?

உலகில் பண்டை கால முதல் வழங்கிவரும் தேசியராஜ்யமே, சுயராஜ்யமெனப்படும். அது இராமராஜ்யமாயிருந்தாலும் சரி, அல்லது இராவண ராஜ்யமாயிருந்தாலும் சரி, இவை யாவும் சுயராஜ்யமே. அல்லது தற்கால பிரெஞ்சு ராஜ்யமானாலும் சரி, பிரிட்டிஷ் ராஜ்யமானாலும், இவையாவும் சுயராஜ்யமே. அல்லது மகாத்மாகாந்தி கோரும் ராஜ்யமானாலும், தேசபந்து தாஸ் கோறிய ராஜ்யமானாலும் இவை இரண்டும் சுயராஜ்யமே. உலகிலுள்ள ராஜ்யங்களில், ஒன்றைத் தவிர, அதாவது, ரஷிய சோவியத் ராஜ்யத்தைத் தவிர, மற்றெல்லாம் சுயராஜ்ய மெனப்படும். இந்த சுயராஜ்யங்களில் ஒன்றுக்கொன்று மேல் கீழ் கிடையா; உயர்வு தாழ்வு கிடையா; இந்த சுயராஜ்யத்தை நடத்துகின்ற திட்டம் குடி அரசாயிருந்தாலும் (Republican), அல்லது ஜனநாயக ஆட்சி (Democracy) என்றாலும், அல்லது ஏகாதிபத்திய ஆட்சி (Autocracy) யாயிருந்தாலும், என்ன வகையாக இருந்தபோதிலும், இவையாவும் சுயராஜ்யமே. அல்லது ராஜா அரசாளும் அரசாயிருப்பினும், சக்ரவர்த்தி அரசாளும் அரசாயிருப்பினும், இவை யாவும் சுயராஜ்யமே.

899
899
320.158
320.158

## சுயராஜ்ய லக்ஷணம்.

இவ்விதமாக, பல வேறுபட்ட அரசுகளின் முக்கிய குறியென்ன வென்றால், பலர் பெயரால், சிலர் அரசு புரியும் விஷயமே முக்கியமான தேசிய ராஜ்யத்தின் குறியாகும். இரண்டாவது குறியென்ன வெனில், அரசு புரியும் சிலர், தங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் இவர்கள் நன்மைக்கே அரசுபுரிவதே இரண்டாவது வித்தியாசமாகும். மூன்றாவது குறியென்ன வெனில், தத்தம் தேசங்களை மற்ற தேசங்களை விட விசேஷப்

R34 N34

படுத்துவது. நான்காவது, சாமானிய குடிகளுக்கு அதாவது 100-க்கு 98 பேருக்கு, இந்ததேசங்களில் நடத்தப்படும் அரசியலில் நேராக செலுத்த வேண்டிய ஆதிக்கம் ஒன்றும் கிடையாது. ஐந்தாவது, எங்கள் தேசம் எங்கள்நாடு என்ற மனப்பான்மை குடி கொண்டுள்ளது. இதைத் தான் தேசிய மென்று வழங்குவது. பொதுவாக இவ்வைந்து குணங்களும் சுயராஜ்யத்தில் அடங்கியுள்ளன. ஆதலின், எவ்வளவு நல்லெண்ணத்தோடு எவ்வளவு நன்மை பயக்கும் காரியங்களை செய்வதாகச் சொன்ன போதிலும், யாதும் விவகாரத்தில் பிரயோஜனப்படுவதில்லை; யாரும் சுகப்படுவதுமில்லை. 'காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பது போல், அரசாங்கவர்க்கத்தினர், (The Governing Class), தங்கள் இனத்திற்கே எல்லா சுக போகங்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு, தங்களுக்கு வேண்டிய சட்ட திட்டங்களால், தங்கள் ஆதிக்கத்தை பாதுகாத்து வருகின்றார்கள். இந்த மனப்பான்மையால் ஆளுகின்றவர்களுடைய நன்மையை தாங்கள் கருதுவார்களே யொழிய, தாங்கள் ஆளும் பிரஜைகளுடைய நன்மையை கவனிக்க முடியாமற் போகின்றது. ஆனபடியால்தான், வேத காலமுதல் நாளது வரை உலக பெரும் பான்மை மக்களை, முக்கியமாக இந்திய தேச மக்களை, பஞ்சமும், தரித்திரமும், இல்லாமையும், நோயும், பகுத்தறிவின்மையும், மூடபக்தியும் அகால மரணமும் வாட்டி வருகின்றன.

## தேசீயமும், போரும்.

சுயராஜ்யம், அதாவது, தேசியத்தின் லக்ஷணம் இன்னென்றுண்டு. பிறருடைய நாட்டைப் பிடிப்பதே தேசியத்தின் இயல்பாகும். உலகில் நடந்த போரெல்லாம் தேசிய மென்று சொல்லப்படும் மண்ணாசைக்குத்தான் புரியப்பட்

டன. பாரத போர் மண்ணுக்காக, ராமாயணப் போர் பெண்ணுக்காக, மற்றப் போர்கள் யாவும் மண்ணுக்காகிலும் பெண்ணுக்காகிலும் புரியப்பட்டு வந்திருக்கின்றன. கால்டியன் (Chaldean), அசீரியன் (Assyrian) சண்டை முதல், ஈஜிப்ட், அரேபியா சண்டை வரை, மண்ணுக்காகவே புரியப் பட்டு வந்திருக்கின்றன. வேத கால முதல், நாளது வரை, இந்தியாவில் புரிந்த சண்டைகள் யாவும், இந்த மண்ணுக் காகவே. ஐரோப்பா தேசத்து சண்டை யாவும், தேசீயத் தின் பேரால் நடந்தவைகளே. ஆசியா கண்டத்தில் புரிந்த போர்களெல்லாம், இந்த மண்ணை பிடுங்குவதற்கே. யூராப்பிய ஏழு வருஷ சண்டை, முப்பது வருஷ சண்டை, நூறு வருஷ சண்டை; மத்தியகால சண்டை, நெப்போலியன் சண்டை, ரஷிய துருக்கி சண்டை, சீனு, ஜப்பான் சண்டை, நேற்று நடந்த மகாயுத்தம், எல்லா சண்டைகளும், 4000 B. C. முதல், 1933 A. D. வரை புரிந்துவந்த சண்டைகள் யாவும், தேசீய மண்ணைப் பிடிக்கவே புரியப்பட்டன. நமது இந்திய நாட்டின் மீது மகமதுகஜினி என்போன், 24 தடவை படை யெடுத்தானும்! ஜப்பான் தேசத்து ஜின்கோ என்ற சக்ரவர்த் தினி கொரியா மீது 100 தடவை படை யெடுத்தனளாம். கடைசியாக நமது பிரிட்டிஷாரும் இந்திய நாட்டை போர் புரிந்து இந்திய மண்ணை பிடிங்கி 200 வருட காலமாக ஆண்டு வருகின்றனர். கடந்த 6000 வருடங்களாக, நடந்த சண்டைகளால் மாண்டவர்கள் எத்தனை, அனுதிகள் எத்தனை, பொருள் அழிவு எத்தனை, நாசமான நாடுகள் எத்தனை, கணக்கெடுக்க முடியுமோ! இவ்வளவும் தேசீயத்தால் (Nationalism) வந்ததென உணர்க.

காந்தியார் சுயராஜ்யத்தில் இவ்வித போர் நடக்காதென் பது, என்ன நிச்சயம்? இதுவும் தேசீய ராஜ்யமாதலால்,

அதன் அறிகுறியாகிய சண்டையும், போரும், நிகழாமல் இருக்காதெனவும் உணர்க. 'சாத்மீகம்' 'சாத்மீகம்' என்ப தெல்லாம் சமயோசித சொற்களே யொழிய, காரியாம்சத்தில் யாதொன்றும் நடவா. "என் தேசம்" "உன் தேசம்" என்ற வித்தியாசம் இருக்கும் வரை, போர் நடந்தே தீரும். இந்திய சுயராஜ்யத்தில், இந்திய நாடு போரற்று வாழுமென்பது வீண்பேச்சு. இந்த தேசிய முதலாளிகளே, இந்த வர்த்தகர்களே, இந்த ஜட்ஜுகளே, இந்த லாயர்களே, சுயராஜ்யத்தில் அரசுபுரியப் போகின்றவர்கள். இந்த தேசிய வாதிகளே அரசுபுரியப் போகின்றார்கள். இவர்களுடைய செல்வத்தையும், செல்வாக்கையும், ஆதிக்கத்தையும், பாமர மக்களுக்கு சரி சமத்துவமாக விட்டு கொடுக்கப் போகின்றார்களா? அது ஒருபோதுமில்லை. பிறருடைய நாட்டின் செல்வத்தின்மேல் இவர்களுக்கெல்லாம், ஒரு கண் இருந்தே தீரும். இனி வரப்போகும் சுயராஜ்யம், ராம ராஜ்யத்தைப்போல் இருக்குமென்று சொல்லும்போதே, அந்த சுயராஜ்யத்தின் லக்ஷணம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. ராமன் குழந்தை பருவ முதல் சாகும் வரை போர் புரிந்து வந்திருக்க, இனி வரும் ராம ராஜ்யம் போரற்று இருக்குமாவென்று கேட்கின்றோம்? இலங்கை அழிந்தது சீதையால் என்று சிறு பெண்கள் பாடும் கதையை மறக்க முடியுமா? மாரீசன், சுபாகுவைக் கொன்று, தாடகையை சித்திரவதை செய்து, சூர்ப்பனகையை மூக்கையும், காதையும் அறுத்து, இறுதியில் இலங்கையையும், இராவணனையும் அழித்து, இலங்கைத் தீவு முழுமையும் கைப்பற்றியது அகிம்சையா என்று கேட்கின்றோம்? இராமன் இலங்கையை விட்டு திரும்பி வந்தும், சாந்தமாக ராஜ்யபாரம் செய்யவில்லையே. அயோத்திக்கு வந்தவுடன் உலகத்தை ஜெயித்து ஏகாதிபத்தியத்தை

நிலே நாட்ட, தான் பெற்ற மக்களுடனே போர் புரிந்து, அஸ்வ மேத யாகம் செய்ததை யார் மறப்பார்கள்? அயோத்தியி லிருந்து இலங்கை வரை, ரத்தக்களமாக்கிய ராம ராஜ்யத் தைப் போல காந்தி ராஜ்யமு மிருக்குமென்றால், இந்திய சுய ராஜ்யத்தின் ஆபாசம் விளங்கவில்லையா! ஆதலின், காந்தி யின் சுயராஜ்யத்தை உதறித் தள்ளுவதற்கு, இதுவொன்றே போதும். இதுவுமன்றி அகிம்சா தர்மியாகிய காந்தியாரும், நேற்று கொன்றவனை புகழ்ந்து போற்றியதை யாரும் மறக்க மாட்டார்கள். அது தேசீயமென்றால், அதைத் தான் நாங்க ளாகிய சமதர்மிகளும் சொல்லுகின்றோம். தேசீயத்தில் எந்த தேசமானாலும் சரி, எந்த மகாத்மா ஆண்டாலும் சரி, போரின் மனப்பான்மையும், சண்டையும் இல்லாமல் போகா தென்கின்றோம்.

## தேசீயமும், மூட நம்பிக்கையும்.

எந்த தேசீயத்திலும் மூட நம்பிக்கையை ஆதரிக்காம லிரார். மதங்களை ஆதரிக்காத தேசீயம் உலகிலில்லை; இருக் கப் போவது மில்லை. நேராக ஆதரிக்காவிடினும், பராமு கத்தோடாகிலும் மதங்களை தேசீயம் தழுவியே தீரும். இதை செய்யாத சுயராஜ்யம் எங்குமில்லை. தேசீயம், அதாவது சுய ராஜ்யத்தில், சோவியத் நாட்டைத் தவிர, மற்ற எந்த சுயராஜ்ய நாடு மதத்தை எதிர்த்து நிற்கின்றது? காந்தியார் சுயராஜ் யத்தில் மாத்திரம் மதத்தை தடுக்கப் போகின்றார்களா? அது இல்லையென்றே தீர்கமாகச் சொல்லலாம். தீண்டாதாரை கோவிலில் போக விடுவது, மதத்தை தடுப்பதற்கு அடையாள மல்ல. பாமர மக்களை இன்னமும் மூடநம்பிக்கையில் ஆழ்த்தி வைக்கத்தான் இந்த கோவில் பிரவேச உபாயத்தைகாட்டுவ தென்று அறிதல் வேண்டும். வர்ணாசிரம தர்மத்தை ஆதரிப்

பதும் மதத்தை நழுவ விடுவதல்ல. இந்த உபாயமும் ஏழை மக்கள் சண்டைகள் செய்து அவதிப்படுவதற்குத் தான் ஏற்பட்டுள்ளது. இந்து மகமதிய ஒற்றுமை என்றபோதே, இனிவரும் சுயராஜ்யம் மதங்களை ஆதரிக்கும் சுயராஜ்யமேயொழிய வேறல்ல. இதை நாம் வாதிக்க வேண்டியதில்லை. இவ்விருமதஸ்தர்கள் செய்து கொண்ட ஒற்றுமை ஒப்பந்தத்தில், அவரவர் மதங்களை சுயராஜ்பத்தில் ஆதரிப்பதாகவே உடன் பட்டுள்ளார். மதங்களை ஒழித்து விடாமல் ஆதரித்து வருவதால், மதப்பித்து வளரு மென்பதற்கு என்ன சந்தேகம்.

## மதங்களும், அரசியலும்.

உலகிலுள்ள எல்லா சுயராஜ்ய அரசுகளும், மதங்களை தழுவி நிற்பதற்கு காரணம் என்ன வெனில், மதங்கள்யாவும் தேசீய அரசை ஆதரிக்கின்றன. இரண்டாவது, மதங்களின் ஸ்தாபனங்களில், அரசு புரிவோருக்கு மிக்க செல்வாக்குண்டு. மூன்றாவது, அரசுபுரியும் வகுப்பாருக்கு, பாமரமக்கள் மூடராய் இருக்க வேண்டியது அவசியமாகும். நான்காவது, மூடபழக்க வொழுக்கங்களிலிருந்து பொது மக்கள் விடுபட்டுதெளிவடைந்தால், தங்கள் அரசியல் ஆதிக்கத்திற்கு இடையூறு ஏற்படுமென்றபயம் எல்லா அரசுக்கும் இருந்து வருகின்றது. ஐந்தாவது, இத்யாதிகாரணங்களால் தேசீய ராஜ்பங்களில் மதங்களும் மூட வழக்கங்களும், பாதுகாக்கப்பட்டுவருகின்றன. ஆறுவது, எல்லா சுயராஜ்யங்களிலும் ஜாதி வேற்றுமை, இன வேற்றுமை இருந்தே தீரும். ஏனெனில் எல்லா தேசீய நாட்டிலும், முதலாளியென்றும், தொழிலாளியென்றும் வித்தியாசமிருந்து வருவதாலென அறிக. உயர்ந்தவன் (Lord), பிரபு (Zamindar) ஒரு பக்கமும், தாழ்ந்தவன், பறையன், பள்ளன் மற்றொரு பக்கமும், எந்த சுயராஜ்யத்திலும் இருந்தே வருவார்

கள். ஜன சமூகத்தில் இந்த ஜாதிவேற்றுமைகளும், சமயவேற்றுமைகளும் இருந்தால்தான், முதலாளி அரசு நிலைத்து செழிக்க முடியும். இந்த இன வேற்றுமை எந்த தேசிய நாட்டிலுமுண்டு. அப்படியிருக்க, நமது காந்தியார் சுயராஜ்யத்தில் மாத்திரம், இந்த இன வேற்றுமை, ஜாதி வேற்றுமை இல்லாமற் போகுமா? அது ஒரு போதுமில்லை. நமது காந்தியார் தீண்டாமை ஒழிய வேண்டுமென்கிறாரே ஒழிய, ஜாதி ஒழிய வேண்டுமென்று சொல்வதில்லை. அவனவன் அந்தந்த ஜாதி வேலையை செய்யவேண்டுமென்று காந்தியாரும் கூறுகின்றார். இதைத் தான் 'பகவத்கீதையும்' கூறுவது. 'பகவத்கீதையை' காந்தியார் தன் வேதமென்றும் கூறுகின்றார். ஆனால் 'பகவத்கீதை' ஜாதியை பலப்படுத்த உண்டான நூலென அறிதல் வேண்டும். அதனால்தான் காந்தியாரும், அந்நூலை ஆதாரமாகக் கொள்வது. வேதங்களையும், புராணங்களையும், பகவத்கீதையையும் அதிகாரமாகக் கொண்ட சுயராஜ்யத்தில், ஜாதி யெங்ஙனம் ஒழியும்? சமயங்கள் எல்வாறு ஒழியும்? பிராமணன் இருக்கும் வரை, பறையன் ஒழியமாட்டான். பறையன் இருக்கும் வரை, பிராமணனும் ஒழியமாட்டான். தீண்டாதாரை கோவிலில் விடவேண்டுமென்பதெல்லாம் ஓர் குயுக்தியென வறிக. காந்தியார் சுயராஜ்யத்தில் அவர் உண்ணாவிரதத்திற் கிணங்கி, தீண்டாதாரை கோவிலில் பிரவேசிக்க அனுமதித்த போதிலும் அல்லது, ஹரிஜனனென்றும், தரித்திர நாராயணனென்றும் தீண்டாதாரை இந்த மாயப்பேர்களால் அழைத்த போதிலும், பறையனும் பள்ளனும், பறையனாகவும் பள்ளனாகவுமே அழைக்கப் படுவான்; அதற்கு சந்தேகமில்லை. பூணூலை அறுக்காத காங்கிரஸ்காரன் இருக்கும் வரையில் பறையனென்றும், பள்ளனென்றும், சர்கார் ரிகார்டுகளில் பதியும் வரையில், "தீண்டாமை ஒழிக" என்பதெல்லாம் வெறும் வேஷமெனவறிக.

(This is nothing but a big camouflage). இது பெரும் மயக்கமே வொழியவேறில்லை.

## சுயராஜ்யமும், பொருளாதாரமும்.

எல்லா சுயராஜ்ய தேசங்களில் ஆட்சி புரிவோரிடத்தே எல்லா பொருளாதார செல்வாக்கும் இருந்துவரும். ஆதிக்கத்திற்கு அடையாளம் செல்வமாகும் (Wealth). அரசுபுரிவோருக்கும் ஆதிக்கம் வேண்டும். இந்த ஆதிக்கத்திற்கே, எல்லா செல்வத்தையும், அரசுபுரிவோர், தங்கள் கைக்குள் அடக்கிவைத்து இருக்க வேண்டி வருகிறது. எல்லாவித பொதுவாக கருதவேண்டிய செல்வங்கள்யாவும்:—நிலம், நீர், சுரங்கம், தொழிற்சாலை, ரயில், கப்பல், வீடு, மனை, கல்வி, பாங்குயாவும், அரசுபுரியும் இனத்தார் (Ruling Classes) கையில் இருந்தே வரும். அமெரிக்கஅரசும், பிரெஞ்சுஅரசும், ஜெர்மனிஅரசும், பிரிட்டிஷ்அரசும் மற்றுமுள்ள பெரிய சிறியமுதலாளி அரசுகளும், தங்கள் நாட்டின் பெரும்பான்மை பொது சொத்துகளை கைக்கொண்டே இருக்கின்றார்கள். மிகுதியான சொத்துகள் யாவற்றுக்கும் அவர்களே உரியவர்களாக இருந்து வருகின்றார்கள். இவ்வுரிமையால்தான் மற்ற பெரும் பான்மை குடிமக்களாகிய பொருளற்றோரை அடக்கி ஆள முடிகின்றது. இந்த செல்வப் பெருக்கால்தான் அரசுபுரியும் சிறுபான்மை மக்கள், ஏகாதிபத்திய அரசை நடத்தும் அதிகாரம் அவர்களிடத்தில் இருந்து வருகிறது. இந்த பொருளாதார செல்வாக்கைக் கொண்டுதான், இச்சிறுபான்மையோர், மற்ற பெரும்பான்மையோரை, அடக்கி ஆளசாத்தியப் படுகின்றது. இந்த நிலைமை, காங்கிரஸ் சுயராஜ்யத்தில் மாறுமா வென்று கேட்கின்றோம்? புலியும் பசுவும் ஓர் துறையில் நீர் அருந்தினலும் அருந்தும்; ஆனல் முதலாளியும் தொழிலாளி

யும் சரிசமத்துவமாக தங்கள் தேச பொருள்களை, காந்தியார் சுயராஜ்யத்தில் அனுபவிப்பார்கள் என்பது பகற்கனவே. தனது சுயராஜ்யத்தில், தொழிலாளிக்கு, முதலாளி தர்மகர்தர்களாக இருக்க வேண்டுமாம்! முதலாளியை தொழிலாளி பணிந்து நடக்க வேண்டுமாம்!! முதலாளியைத் தொழிலாளி எதிர்க்கக் கூடாதாம்!!! தொழிலாளி பொருளியாகக் கோரக் கூடாதாம்!!!! இம்மாதிரியாக நண்டைசுட்டு, நரியைகாவல் வைக்கும் தரும நீதியைத் தான் பொருளாளி இனத்தோர் மரபில் வந்தவராகிய காந்தியார் நமது இந்திய நாட்டு 35 கோடி இந்திய மக்களுக்கு போதித்து வருகின்றார்!!!!! இந்த தரும நீதியைத் தான், காங்கிரஸ் பர்டோலி திட்டத்திலும் வற்புருத்தப் பட்டுள்ளது. காந்தியார் சுயராஜ்யத்தில், முதலாளிகள் தொழிலாளிகளுக்கு டிரஸ்டிகளாக இருக்கவேண்டு மென்றால், மற்ற தேசிய சுயராஜ்யங்களுக்கும், காந்தியார் சுயராஜ்யத்திற்கும் என்ன வித்தியாசம்? ஆங்கில நாட்டில் பால்டுவினும், மெக்டனல்டும், 4-கோடி ஆங்கில மக்களுக்கு டிரஸ்டிகளாகவே இருந்து வருகின்றார்கள். நமது இந்திய நாட்டிலும், காந்தியார் தர்மராஜ்யத்தின்படி, ஜவகர்லால்நேருவும், மாளவியாவும், 35 கோடி இந்திய மக்களுக்கு டிரஸ்டிகளாக இருக்கப் போகின்றார்கள். இத்யாதிதற்போதுள்ள மேல் நாட்டு சுயராஜ்யத்தை விட்டு, நமது நாட்டு காந்தியார் சுயராஜ்யத்தைக் கோருவானேன்?

## சுயராஜ்யமும், தனிசொத்து உரிமையும்.

இந்த தனி சொத்துரிமை கராச்சி காங்கிரசிலும் வற்புருத்தப் பட்டிருக்கிறது. எல்லா தேசிய இராஜ்யங்களில், தனி சொத்துரிமை பாதுகாக்கப்படும். காந்தியார் சுயராஜ்ய திட்டத்திலும் முக்கியமாக தனி சொத்துரிமை

பாதுகாக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் திட்டத்திலும் (The new Constitution) தனி சொத்து உரிமை பாதுகாக்கும்படி திட்ட மேற்பட்டுள்ளது. நேற்று ஏற்பட்டுள்ள புதிய குடி அரசுகளிலும், ஜெர்மனி (Germany), போலந்து (Poland), துருக்கி (Turkey) முதலிய தேசீய அரசுகளில், தனி சொத்து உரிமைக்கு பாதுகாப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பின் லக்ஷணம் என்னவெனில், உலகம் இரண்டு வகுப்பாக பிரிந்திருக்கும் காட்சியே ஆகும். உடையவன், இல்லாதவன், என மனித கூட்டம் பிரிந்திருப்பதும், இந்த தனி சொத்து உரிமையால் நிகழ்ந்து வரும் வித்தியாசம் என அறிதல் வேண்டும். மகராஜன், ஏழை, என்று உலக மக்கள் பிரிந்து இருப்பதும், இந்த பொருளாதார வித்தியாசத்தினுல் என அறிக. எஜமான், வேலைக்காரன், என்ற வித்தியாசமும்; முதலாளி, தொழிலாளி; என்ற வித்தியாசமும்; சுதந்திரக்காரன் (Freeman), அடிமை (Slave), என்னும் வித்தியாசமும் மக்களுக்குள் ஏற்பட்ட காரணம் என்ன வெனில், சிலரிடம் பொருள் தங்கவும், பலரிடத்தில் ஒன்றும் இல்லாமையால் என அறிக.

## பொருளாதார வித்தியாசம்.
## (Economic inequality)

இந்த பொருளாதார வித்தியாசம், (Economic inequality), ஆதிகாலம் தொடக்கியே நீடித்து வந்துளது. ராமராஜ்யத்திலும், தசரதராஜ்யத்திலும், துரியோதன பாண்டவர் ராஜ்யத்திலும், இந்த பொருளாதார வித்தியாசம் இருந்தே வந்தது. இன்றைக்கும், பிரிட்டிஷ் முதலிய சுயராஜ்யங்களிலும், இருந்தே வருகின்றது. நாளைக்கும் காந்தியார் சுயராஜ்யத்தில் இருந்தே வரப்போகின்றது. இதற்கு என்ன தடை? தனி சொத்துரிமை (Individual Ownership) பாதுகாக்

கப்படும் வரை, சிலரிடத்தே பொருள் தங்கும். பலர் பட்டினி கிடைக்க வேண்டியதே. தண்ணீர் பள்ளத்தை நோக்குவதைப் போல், செல்வம், பணம் படைத்த சிலரிடத்தே சென்று குவியும். இல்லாமை, அதாவது, வறுமை, ஏழை மக்களிடம் தான் தங்கும். இந்த கொடிய திட்டத்தை மாற்றி, யாவரும், தனது சுயராஜ்யத்தில், சொத்துரிமையைப் பெற, நமது காந்தியார் ஒரு சொல்லேனும் சொல்லவில்லை. கதரை ஆதரியுங்கள், தீண்டாதாரை கோவிலில் விடுங்கள் என்று உபதேசிக்கின்றார். ஆனால் கதரால், அதாவது சுதேசியத்தால், சிலர் மாத்திரம் பணக்காரர்களாகும் பொருளாதார திட்டத்தை (Economic Law) உணர்ந்தாரில்லை. கோவிலில் 7 கோடி தீண்டாதாரை விடவேண்டும், அல்லாவிடில் பட்டினி கிடந்து சாவேன் என்று பயமுறுத்துகின்றாரேயொழிய, அந்த 7 கோடி பஞ்சமர்கள் நிலமில்லாமல், நீரில்லாமல், குடிக்க கஞ்சில்லாமல் சாகின்ற கொடுமையை கவனித்தாரில்லை. மற்றதேசீய நாடுகளில் உள்ள மகராஜனும், ஏழையும், உடையவனும், (Haves), இல்லாதவனும் (Have nots), முதலாளியும், தொழிலாளியும், சிலரிடம் செல்வப்பெருக்கும், பலரிடம் தரித்திரமும், சிலரிடம்வீண்செலவும் (Waste) பலரிடம் சிக்கனமும் (Economy), இருந்து வருவதைப் போல், இந்திய சுயராஜ்யத்திலும் இருக்குமாகையால், நமது சுயராஜ்யத்தின் விசேட மென்ன?

இந்த பொருளாதார வேற்றுமை யுள்ளவரை எந்த அரசாயினும் சரி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம் என்பதெல்லாம் பொய்பேச்சு. உடையவனுடைய பொருளைக் காப்பதற்குத்தான், எல்லா போலீசும், எல்லா நீதியும், எல்லா சேனை சிப்பந்திகளும் ஏற்பட்டுள்ளன. ஆனால், எந்த இல்லாதவனுடைய வறுமைமையைப் போக்க, எந்த நியாயம், எந்த

சட்டம், எந்த அரசு ஏற்பட்டுள்ளது? இனிவரும் சுயராஜ்யத்தில் தினம் ஒன்றுக்கு ராட்டினத்தைசுற்றி 5-பைசா சம்பாதியுங்களென திட்டமிடப் போகின்ருர்கள். இந்த 5-பைசாவைக் கொண்டு உண்ணஉணவும், உடுக்க ஆடையும், இருக்க வீடும், கற்க கல்வியும், தனக்கும் தன் சம்சார குழந்தைகளுக்கும் சம்பாதிக்க வேண்டும்! இது தான் நமக்கு காந்தியார் கொண்டுவரும் பெரும் சுயராஜ்யபந்தில் இடப்போகும் நன்கொடை. ஆனல், அந்த சுயராஜ்யத்தில் ஒருவனிடம் இருக்கும் நவரத்தின மிழைத்த நகைகளும், பங்களாக்களும், தோட்டம் துறவுகளும், ரத்தன கம்பளிகளும், நாற்காலி, மேஜை, சோப்பாக்களும், வீடுவாசல்களும், மோட்டார்கார்களும், தாசி வேசிகளும், குடிகூத்திகளும் தொடப்படாதாம்! அசைக்கப்படாதாம்!! இந்த நிலைமையைத்தான் நமது சுயராஜ்யத்தில் காக்கப்படு மென்று காங்கிரஸ் அரசியல் திட்டத்தில் செய்துளது!!! இந்த இந்திய சுயராஜ்யத்தை விட, நமது இந்திய சுடுகாடேமேலென்பதற்கு என்ன தடை?

இந்த பொருளாதார வித்தியாசத்தால், தொழிலாளிக்கு தொழில் நிச்சயம் (Security of Service) இல்லாமல் போகின்றது. போதுமான வருமானமும் (Living Wage) இல்லாமற் போகின்றது. தற்கால உலகபொருளாதார திட்டத்தில் (Current Economic System) தொழில் நிச்சயமும் போதுமான வருமானமும், கிடைக்கப் போவதில்லை. அடிமைத் தொழிலும் நீங்கப் போவதில்லை. இந்த திட்டத்தை அனுசரித்துவரும் தேசியராஜ்யங்களில் (Nationalist Governments) இம் மூன்று பொருளாதார செல்வாக்கும் (Economic Advantageous) தொழிலாளிக்கு கிடைக்காமலிருக்க, நமது இந்திய சுயராஜ்யத்தில் மாத்திரம் எப்படி கிடைக்கும்? தனி சொத்துரிமையோடு இணைபிரியாமலிருப்பது, பொருளா

தார அடிமைத்தன மொன்றே. இந்த அடிமைத்தனம் நீங்கினுலொழிய, தொழிலாளிக்கு வேலை நிச்சயம் ஏற்படப்போவதில்லை. உண்ண போதுமான உணவும் அகப்படபோவதில்லை. உண்ண உணவும், வேலை நிச்சயமும், இவ்விரண்டும் கிடைக்காத சுயராஜ்யம் வந்தென்ன? வராதிருந்தாலென்ன? இந்த சந்தர்பத்தில் தொழிலாளரும் விவசாயிகளும் மற்றுமுள்ள பொது ஜனங்களும் அறிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், இந்த பொருளாதார அடிமைத் தனத்தை (Economic Slavery) நீக்க ஒரு வார்த்தை கூட காந்தியார் சொல்வதில்லை. 'கதர்' 'கோவில் பிரவேசம்' 'தீண்டாமை' 'தர்ம கர்த்தர்கள்' என்று இந்த சொற்களைத் தான் பல்லவியாகபாடி வருகின்றார். இச் சொற்களால் தான், இவரைச் சுற்றியுள்ள முதலாளிகளும், வர்த்தகர்களும், பணக்காரர்களும், பார்பனர்களும் இவரை மதித்து வருகின்றார்கள். இச் சொற்களால் தான் அவருக்குள்ள எல்லா செல்வாக்கும் மதிப்பும். மேலே குறிப்பிட்ட பூச்சாண்டி சொற்களை விட்டு விட்டு, வேலை நிச்சயம், போதுமான உணவு, முதலிய பொருளாதார பாடலை பாடுவாரேயானுல் இவருக்கு தற்போதுள்ள தேச மதிப்பும், செல்வாக்கும், ஒரு நிமிஷத்தில் பறந்து போகுமென அறிக.

சுருங்க கூறுமிடத்து, காந்தியார் சுயராஜ்யத்தில் தனி உடமை, ஆதரிக்கப்படும். அதில் அடங்கியுள்ள பொருளாதார அடிமைத்தனமும் நிலைத்து வரும். தொழிளாளிகளுக்கும், விவசாயிகளுக்கும், உண்ண போதுமான உணவு இல்லாமை, இன்றைக்கு இருந்தவாரே இருந்து வரும். தோழர்களே! இந்த சுயராஜ்யமா வேண்டு மென கேட்கின்றேன்? ஏனெனில், காந்தி ராஜ்யத்தில் தற்போதுள்ள நிலைமையாகிய பொருளாதார வித்தியாசமே நிலைத்து வரப் போகின்றது. ஆயிரம் பதினுயிரம் பேர்கள் மாத்திரம் எல்லா நிலங்களையும்

நீர்களையும் (Waters) தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், வீடு வாசல்களையும், பாங்குகளையும் சொந்தமாக ஆண்டு வரப் போகின்றார்கள். ஆனால் கோடானு கோடிமக்களோ, இவை எதுவும் சொந்தமின்றி, உண்ண போதுமான உணவின்றி, அறிவுவிளங்க சரியான கல்வி இன்றி, மக்களை வளர்க்க சுகாதார வீடின்றி, போதுமான கூலியின்றி, வேலை நிச்சயமின்றி உழைத்துவரப் போகின்றார்கள். காந்தியார் சுயராஜ்யத்தில் அது தான் சிலருக்கு வரப்போகும் நற்பாக்கியம். இது தான்பெரும்பான்மை யோருக்குவரும் துர்பாக்கியம்.

ஆதலால், இந்த துர்பாக்கிய நிலைமைமாறி எல்லா மக்களும் சரி சமத்துவமாக வாழவேண்டுமானால், சமதர்ம ராஜ்யத்தில் ஒன்றில் தான் முடியும். ஆதலால், தோழர்களே! இந்த சமதர்மராஜ்யம் (Socialism) வேண்டுமா என்று கேட்கின்றேன். இனி சமதர்மராஜ்யத்தை விளக்குவோம்.

# இரண்டாவது அத்தியாயம்.

## சமதர்மராஜ்யத்தின் லக்ஷணங்கள்.

முன் ஏடுகளில் சுயராஜ்யத்தின் லக்ஷணங்களையும், அதன் குறைபாடுகளையும், எடுத்துக் காட்டினோம். இந்த குறைகளை உடைய ராஜ்யம் நமக்கு வேண்டுமோ எனவும் கடாவினோம். இனி சமர்தர்ம ராஜ்யத்தின் லக்ஷணங்களையும், அதன்மேம்பாட்டையும், விளக்குவோம்.

சமர்தர்பம் அல்லது சமதர்மராஜ்ய மென்றால் என்ன? "சமதர்மம்" என்ற சொல்விற் குறியபொருள் என்னவெனில், ஆங்கிலத்தில், (Equal Responsibility) அதாவது சமத்துவப் பொருப்பு என்பதாம். தனவந்தரும், எளியோரும்; முதலாளியும், தொழிலாளியும்; உடையோனும், இல்லாதவனும்; நிலம் படைத்தோனும், நிலம் இல்லாதவனும்; வீடு படைத்தவனும், வீடு இல்லாதவனும்; வாங்குவோனும் விற்போனும்; எல்லோரும், சரி சமத்துவ பொருப்பு வாய்ந்தவர்களாக இருத்தல், சமதர்ம மெனப்படும். எப்பொழுது சமப் பொருப்பு இருக்கின்றதோ, அதனோடு சம உரிமையையும் உண்டு. அதனை ஆங்கிலத்தில் Equal Right என்று வழங்குவார்கள். ஆதலின் சமதர்மத்தில், சரிசம பொருப்பும், சரிசம உரிமையும், (Equal Rights and Equal Responsibilities) பொருந்தி உள்ளன. எந்த சமூகத்தில் எல்லா மக்களுக்கும் சம உரிமையும், சம பொருப்பும் உள்ளனவோ, அந்த சமூகம், சமதர்ம சமூகமெனப்படும். அதனை ஆங்கிலத்தில் Socialist Community என்று கூறுவர். அவ்வித சமதர்ம சமூக ஆட்சியை சமதர்மராஜ்ய மென்று வழங்குவர். ஆங்கிலத்தில் இதனை Socialist State என வழங்கப்படும்.

சிலர், எந்த சமூகமாவது, சாதி வேற்றுமை இல்லாதிருந்தால் அதனை சமதர்மமென்று நினைக்கின்றார்கள். அது தவறு. மகமதியர்களுக்குள் சாதி வேற்றுமையில்லை. ஆனால், அச் சமூகத்தை சமதர்ம சமூக மென்று கூறமாட்டார்கள். இன்னும் சிலர், ஜாதி வேற்றுமை யற்று, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேற்றுமையுமற்று, பொதுவாக உண்ணுதல் சமதர்ம மென்பார்கள். அதுவும் தவறு. மகமதியர்களும் ஐரோப்பியர்களும் ஜாதி வேற்றுமையின்றி சமத்துவமாக உண்ணுகின்றார்கள். ஆனால் அவர்களை சமதர்ம சமூகமென்று அழைக்க முடியாது. கலப்பு மணம் எந்த சமூகத்தில் நடக்கின்றதோ, அந்த சமூகம், சமதர்ம சமூக மென்பார் சிலர். அதுவும் தவறு. கலப்புமணம் புரியும் சமூகங்கள் பலவுள. அப்படி இருந்தும் அச் சமூகங்களை சமதர்ம சமூகமென்று அழைப்பதில்லை. மதமற்ற சமூகம் சமதர்மமாகுமா ? என்று பார்போமானால், அதுவும் ஆகாது. நாஸ்திக சமூகத்தாரை சமதர்மிகளென்று வழங்குவதில்லை. ஆனால் ஜாதியின்மை, மதமின்மை, சமதர்ம அனுஷ்டானத்தில் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும், இவைகளனைத்தை மாத்திரம் அனுஷ்டிக்ககூடிய சமூகங்கள் சமதர்ம சமூகமாகா. சரி சமத்துவம், சமஉரிமை, இவை பொருள் படைத்தலில் அதாவது பொருளாதாரத்தில் இல்லாவிடில், மற்ற எந்த உரிமையும், எந்த சமத்துவமும் இருந்தும் பயனில்லை. எந்த பொருப்பு இருப்பினும் பயனில்லை. பொருளாதாரத்தில், சமஉரிமை (Equal Rights,) சமபொருப்பு (Equal Responsibility), எந்த சமூகத்திலில்லையோ, அந்த சமூகம் சமதர்ம சமூக மாகாது.

பாரத ராமாயண காலமுதல், எவ்வளவோ, கடவுளற்ற சமூகங்களிருந்தன. ஜாதியற்ற சமூகங்களிருந்தன. இன்றைக்கும் இருந்து வருகின்றன. ஆனால் அவைகள் யாவும்

சமதர்ம சமூகங்களென சொல்ல முடியாது. அப்படியானல் சமதர்ம மென்றால் என்ன? நாட்டில் விளையும் விளைபொருளும், செய்யப்படும் செய்பொருளும், அந் நாட்டிலுள்ளயாவருக்கும், சரிசமத்துவமாக விநியோகமாகும் சமூகமெதுவோ, அது தான் சமதர்ம சமூகமெனப்படுமென மதிக்கப்படும். மற்ற சமூகங்கள்யாவும், முதலாளிசமூக மென்றாகிலும், பொருளாளி சமூகமென்றாகிலும், சிறு முதலாளி சமூக மென்றாகிலும், அல்லது சிறு பொருளாளி சமூகமென்றாகிலும், வழங்கப்படும். இத்யாதி சமூகங்கள், ஜாதி இல்லாதவர்களால் நிறைந்திருக்கலாம், அல்லது மதமற்றவர்களால் நிறைந்திருக்கலாம், அல்லது கலப்பு மணம் செய்கின்றவர்களாலும் நிறைந்திருக்கலாம். இருந்தாலும், இத்யாதி சமூகங்கள், சமதர்ம சமூகங்களாகா.

## சமதர்ம சமூக, முக்கிய லக்ஷணங்கள்.

சமதர்ம சமூகத்தில், மற்ற சமூகங்களில் இருந்து வரும் முக்கிய இலட்சணங்கள் இல்லாமலிருந்து வரும். அவை யாவன:—முதலாவது சகலவித பொருள்களிலும் லாபம் சம்பாதிக்கும் மனப்போக்கு சமர்தர்மத்தில் இல்லாமலிருக்கும். இந்த மனப்போக்கால், உழைத்தவனுக்கு ஒன்றுமில்லாமல், உழைக்காத சோம்பேரிகளுக்கு எல்லா லாபமும் கிடைக்கும் திட்டம் சமதர்மத்திலில்லை. இரண்டாவது, சிலரே, சகல பொருள்களையும் கைப்பற்றி, சொந்தமாக்கிக் கொள்ளும் லக்ஷணமும், சமதர்மத்தில் இல்லாமல் இருக்கும். மூன்றாவது, விளையும்பொருள்களும், செய்யும் பொருள்களும், விளைவிக்கச்செய்யும் சமூகத்தாருக்கு, ஏற்றத்தாழ்வின்றி விநியோகம் செய்யப்படும் லக்ஷணம், சமதர்மத்தில் விசேஷமாக பொருந்தி உள்ளது. நான்காவது, சமதர்ம சமூகத்தில்,

நிலத்தீர்வை வாங்கும் நிலச்சுவான் இரான். குடக்கூலி வாங்கும் சொந்த்க்காரனுமிரான். லாபம் சம்பாதிக்கும் வர்த்தகனுமிரான். வட்டிவாங்கும், வணிகனுமிரான். அவசியமாக வாங்கவேண்டிய நிலத்தீர்வையும், குடக்கூலியும், வீட்டு வாடகையும், வர்த்தகலாபமும், கடனுக்கு வட்டியும், சகலவித லாபங்களும் (Profits), பொது மக்களுக்கே உரித்தாகி, பொதுமக்களுக்கே அவர்கள் உண்ண உணவு, தங்கும் வீடு, வாசல், அணியும் ஆடை, கற்கும் கல்வி, முதலிய வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியங்களுக்கு உபயோகப் படுத்தப்படும். ஐந்தாவது, தற்கால சோம்பேரிகளாகிய நிலச்சுவானும், வர்த்தகனும், வணிகனும், வாடகை வாங்குவோனும், சமதர்மசமூகத்தில் உழைக்கும் மக்களோடு, சரிசமத்துவமாக உழைத்து, எல்லாவித சமதர்மசுகபோகங்களை, சரிசமத்துவமாக, அநுபவிக்கும் பாக்கியத்தை பெறுவார்கள். ஆறுவது, சமதர்ம சமூகத்தில் சொத்து வைத்திருக்கும் ஜாதி என்றும் (Haves), சொத்து இல்லாத ஜாதியென்றும் (Have Nots), இந்த பாழான இனவேற்றுமை இருக்கா. எஜமான் ஜாதியென்றும், வேலை செய்யும் ஜாதியென்றும், சமதர்மத்தில் கிடையா. தற்கால உலகத்திலோ, இருக்கும் இரண்டு ஜாதியாகிய, பொருளாளி தொழிலாளி என்போர் இருக்கமாட்டார்கள். சமதர்மத்தில் ஓரே இனம் தான் இருக்கும். அதாவது உழைக்கும் இனம் ஒன்று தான். ஏழாவது, சமதர்மத்தில் ஒவ்வொருவனுக்கும் உழைக்க உரிமையுண்டு, பொருப்புண்டு. எட்டாவது, "உழைக்காதவனுக்கு உணவில்லை" என்பதே சமதர்ம கொள்கையாகும். ஒன்பதாவது, தற்காலத்தில் உழைப்பின்றி சோம்பேரிகளாக வாழ்ந்து வரும் சிலமக்களுக்கு சமதர்மத்தில் வாழ இடமேஇல்லை. பத்தாவது. சமதர்மத்தில், சோம்பேரிகளுக்கு வாழவும் முடியாது.

சமதர்மத்தில் இன்னும் சில லக்ஷணங்களுண்டு. உழைப்பவன் ஒருவன், அநுவிப்பவன் வேறொருவன் என்ற ஆபாச வித்தியாசமான நிலைமையே கிடையாது. "உழைப்பவனுக்கு உரியது, உழைப்பின் பயன்" என்பது தான் சமதர்மத்தின் தர்மம். சமதர்மத்தில் எல்லோருக்கும் உழைக்க ஏற்படும். உண்டாக்கப்படும் பொருள்களும், விளைவிக்கப்படும் பொருள்களும், தினசரி வாழ்விற்கு வேண்டியதாதலால், சமதர்ம சமூகத்தில், வேலை எல்லோருக்கும் இருந்தே வரும். சமதர்மத்தில் வேலை இல்லை என்று சொல்லவராது. எந்த வேலையாகிலும் இருந்து கொண்டே இருக்கும். சமதர்ம சமூகத்தில் வேலை செய்வோர் போதாமலிருக்குமே யல்லாது, யாருக்கும் வேலையில்லாமல் இராது.

சமதர்மத்தில், எந்த காலத்திலும், திருப்தி என்பதே கிளைக்காது. திருப்தி அடைந்த மனித சமூகம், இறந்த சமூகத்திற்கே (extinct society) சமானமாகும். எனவே அதிருப்தியே மனித சமூகத்தின் இயற்கை குணமாகும். அதிருப்தியால் தான், மனித சமூகம், மற்ற மிருகாதிகளை வென்று, தப்பிப் பிழைந்து வந்திருக்கிறது. "ராமன் ஆண்டாலென்ன" "லக்ஷ்மணன் ஆண்டாலென்ன" என்று மனிதன் எண்ணி வந்திருப்பானேயாகில், அவனுடன் வாழ்ந்து வந்த கொடிய மிருகாதிகள், அவனை வாயில் போட்டுக் கொண்டே இருக்கும்.

"ஊரையாளும் ராஜா எவனாயிருந்தாலும், தோட்டிக்கு புல் சுமக்கும் வேலை தான்" என்று, 7-கோடி தாழ்த்தப்பட்டோர், எண்ணி வந்ததினாலேயே, அவர்களை தீண்டப்படாதவர்களென்றும் செல்வமடைய பொருப்பற்றவர்களென்றும், கோவிலுக்குள் நுழையக் கூடாதவர்களென்றும், பண்ணையாட்களென்றும், பறையர்களென்றும் அடிமை

களென்றும், ஹரிஜனங்களென்றும், அழைக்கப்பட்டு வந்திருக்கின்றனர். இவ்வினத்தாருடைய மனத்திருப்தியே இவர்கள் வாழ்வை, தாழ்வுபடுத்தி, இவர்களை முன்னேற்ற மடையவொட்டாமல் செய்து வந்திருக்கின்றது. நமது இந்தியர்களில் சில சோம்பேரிகள் "ஆங்கிலேயருக்கு சந்திரனிடத்தில் பொன் சுருங்க மிருப்பதாக தெரிந்தால் அங்கேயும் போய் பார்ப்பார்கள்" என்று ஏளனம் செய்வதைக் கேட்டுமிருக்கிறேன். அவ்வாறு எழுதி உள்ளதை படித்து மிருக்கிறேன். இவ்விதமாக பிறரை ஏளனம் செய்யும் மனப்பான்மையால் தான், இந்தியர் கடந்த 2000 வருடங்களாக, யாவனர்களுக்கும் (Greeks), சித்தியர்களுக்கும் (Sythians), மங்கோலியருக்கும் (Mongals), டார்டார்களுக்கும் (Tartars), உலாந்தாக்காரர்களுக்கும் (Hollanders), டச்சுக்காரர்களுக்கும் (Duch), போர்சுகீசிகளுக்கும் (Portuguese), பிராஞ்சுகாரர்களுக்கும் (French), கடைசியாக ஆங்கிலேயர்களுக்கும் (Engilsh), அடிமைகளாய் இருந்துவந்தற்கும், வருவதற்கும் நேர்ந்தது. காட்டுமிராண்டியாய் இருந்த மனிதர், நாளடைவில் நாகரீகத்தை அடைந்ததற்கும் மூல காரணமாகவும், தூண்டு கோலாகவும், இருந்து, மனிதனை முன்னேற்றச் செய்தது இந்த அதிருப்தியே. Dissatisfaction is the mother of all progress. அதாவது, அதிருப்தியே எல்லா முன்னேற்றத்திற்கும் தாய், என்றூர் பெரியோர். எனவே, சமதர்ம சமூகத்தில் திருப்தி என்பதே இருக்காது. இருக்கும் சுகத்தைவிட மேலானசுகம் பெறவேண்டுமென்ற எண்ணம், சமதர்ம சமூகத்தில் குடி கொண்டே வளர்ந்து வரும். இந்தமனப்பான்மையை திருப்திசெய்ய முயற்சி, எழுந்தவாறு இருக்கும். இன்று பாதரக்ஷை, நாளைக்கு மின்சாரவிளக்கு, அதன் பிறகு உயர்தரக்கல்வி, அதன் பின் ஓய்வு நேரம், பின்

னர் நந்தவனம், நல்ல வீடு, நல்ல பிள்ளைகள், நல்ல மனிதர் இவ்வாறு படிப்படியாகவே சமதர்ம வாழ்வு உயர்ந்து கொண்டேவரும். சமதர்ம உலகில் மனிதன் மென்மேலும் தன் வாழ்வை உயர்த்திக் கொண்டே போவான். In the evergrowing life, சதாஉயர்ந்து கொண்டே போகும் வாழ்விற்கு வேண்டிய பொருள்களை உண்டாக்க, வேலை எல்லோருக்கும் இருந்து கொண்டே இருக்கும். இந்த சமதர்ம சமூகத்தில், இறந்து போனவர்களுக்கும், இறந்தவர்களுக்கு சமான மானவர்களுக்கு மாத்திரம், வேலை இல்லாமலிருக்குமே ஒழிய, மற்ற உயிர்வாழும் எந்த மனிதர்க்கும் வேலையில்லாமலிராது. அந்த சமதர்ம உலகில், சிக்கனமென்பதும் (Retrenchment, cut in Salary, or Wages) சம்பளத்திலும் கூலியிலும் குறைவு என்பதும், கனவிலும் கேட்பதரிது.

வேலையின் இன்பம் (Love of work,) சமதர்ம சமூகத்தில் தான் காணமுடியும். நாளெல்லாம் உழைத்து விட்டு, அதன் பயனெல்லாம் வேலை செய்யாதவன் அடையவும், வேலை செய்தவன் சொற்ப கூலியோடு செல்லும் காட்சியை சமதர்ம சமூகத்தில் காண்பதரிது. சமதர்ம சமூகத்தில், தான் செய்யும் வேலையின் முழுப்பயன் தனக்கே கிடைக்குமாதலால், அன்புடனும், ஆசையுடனும், தனக்கிட்ட வேலையை செய்து வருவாம். வேண்டா வெறுப்பாகச் செய்யும் தற்கால வேலை சமதர்மத்தில்இருக்கா. சமதர்ம சமூகத்தில், செய்து வரும் வேலை யெல்லாம், சிலர் உபயோகத்திற்கல்லாமல் யாவருடைய உபயோகத்திற்கும் செய்து வரப்படுமாகையால், அதில் உழைப்பவன் ஒவ்வொருவருக்கும் வேலை செய்து உழைக்க அவாமேலிட்டுவரும். சமதர்ம சமூகத்தில் ஒருவனுக்கு பலர், உழைக்க வேண்டிய அவசியமில்லாதபடி

யால், ஒவ்வொருவனும் தனக்கு தெரிந்த வேலையை அன்புடன் செய்து வருவான்.

சமதர்மத்தில் வேலை நிறுத்தம் என்பதே அவசிய மில்லாமற் போகும். தற்காலத்தில், தான் செய்யும் வேலையிலும் அதன் முழுப்பயனை அனுபவிப்பதிலும், யாதொரு அக்கும் பாத்தியதையும் இல்லாததால் வேலை நிறுத்தங்கள் உண்டாகின்றன. ஆனால் வேலை செய்வோரே, தொழில் புரிவோரே, தாங்கள் செய்துவரும் வேலை நிர்வாகத்தை தாங்களே பரிபாலனம் செய்யும் பாத்தியதை சமதர்மத்தில் ஏற்படு மாகையால், தாங்கள் செய்து வரும் வேலையில் எழும் குறைகளை, தாங்களே சரி செய்து கொள்வார்களாகையாலும், வேலை நிறுத்தமோ, அல்லது கதவடைப்போ, சமதர்மத்தில் இல்லாதிருக்கும்.

சமதர்ம சமூகத்தில் வேலை நிறுத்தம் குறைந்தே வரும். 8, 9, 10 மணி நேரம் செய்யும் தற்கால வேலைகள் சமதர்ம சமூகத்தில் இருக்கவே இருக்கா. வாழ்விற்கு வேண்டிய பொருள்கள் யாவும், உலகிலுள்ள மக்கள் 4-மணி நேரம் உழைப்பாலேயே கிடைக்கக்கூடுமென, பொருளாதார விர்ப்பனர்கள் ஒரு கணக்கெடுத்திருக்கின்றார்கள். அதாவது, நமது உலகம் அல்லது நாடு, கல்விபெற வேண்டுமானாலும், யாத்திரை செய்ய வேண்டுமானாலும், சங்கீதம் பாடல் கேட்க வேண்டுமானாலும், நாடகக் காக்ஷி அனுபவிக்க வேண்டுமானாலும், நல்லஉணவு, நல்ல ஆடை, நல்ல வீடுபெற வேண்டுமானாலும், நல்ல புத்திரர்களை வளர்க்க வேண்டுமானாலும், உலகில் கிடைக்கக்கூடிய எல்லா அவசிய சுகபோகங்களை யாவரும் அனுபவிக்க வேண்டுமானாலும், மனிதனுடைய 4-மணிநேர உழைப்பே போதுமென மதிப்பெடுத்திருக்கின்றார்கள். இந்த செல்வாக்குசமதர்ம சமூகத்தில் தான் கிடைக்கும்.

மற்ற நேரங்களை எவ்விதம் கழிப்பதென்று கேள்வி பிறக்கலாம். அதற்கு விடையாதெனில், மன உல்லாசம், தேக உல்லாசம், பொதுஜன சேவையில் உல்லாசம், விஞ்ஞான ஆராய்ச்சியில் உல்லாசம் முதலிய சுகப்பேற்றை ஒய்வு நேரங்களில் யாவரும் அனுபவிக்கக் கூடும். தற்போதோ, லட்சத்தில் ஒருவர்கூட இந்த உல்லாசப்பேற்றை அனுபவிக்க முடியவில்லையே! உலகயாத்திரை யாரால் செய்யமுடிகின்றது! விஞ்ஞான ஆராய்சியாரால் செய்யமுடிகின்றது! கவலையில்லாத தூக்கம் யாரால் அனுபவிக்கமுடிகின்றது! அரசியல் இன்பத்தையாரால் பெறமுடிகின்றது! உலகசுக போகங்கள் யாருக்கு கிட்டுகின்றன! லக்ஷத்தில் ஒருவருக்குக்கூட கிட்டவில்லையே! ஆனல் சமதர்மதிட்டத்தில் ஒய்வு நேரம் அதிகரிக்குமாகையால், சகலரும் உயர்தர வித்தைகளைக் கற்று, வாழ்வை உயர்த்திக்கொள்ள அனுகூலமாகுமன்றோ! காலாகாலங்களாக வேலையின் ஆனந்தத்தை அனுபவிப்போர் சிலரே. ஆனல் சமதர்ம சமூகத்தில் உலகிலுள்ளயாவரும் அவரவர்கள் செய்யும் வேலைகளை ஆனந்தத்துடனே செய்யப் புகுவர். இது ஒன்றே உலகம் சுகம் உய்ய போதுமானதாகும்.

## சமதர்மத்தில், குடும்ப நிலைமை.

பொருளாதார வித்தியாசமற்ற சமூகத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கும், சரி சமத்துவம் உண்மையாக ஏற்படும். பாரத ராமாயண காலமுதல், பொருளாதார வித்தியாசம், ஆணுக்கும், பெண்ணுக்கும், இருந்து வந்தபடியால், ஆண் மக்கள் பெண்மக்களை அடிமைகளாக்கிக்கொண்டு வந்தனர். தற்போது ரஷ்யாவைத் தவிர உலக முழுமையும் இந்த பொருளாதார வித்தியாசம் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்

71785

பட்டுள்ளது. இந்த வித்தியாசத்தின் பயனுக, பெண்களுக்கு சொத்துரிமையில்லை, வேலை உரிமையில்லை, சம்பாத்திய உரிமை இல்லை, மண உரிமை இல்லை, ஒற்றுமை இல்லா கல்யாணத்தை ரத்துசெய்யும் உரிமை இல்லை, அரசியலில் சுதந்திர உரிமை இல்லை, இத்யாதி பலவீனத்தால் உலகிலுள்ள மக்களில் பாதிக்கு மேற்பட்ட பெண்மக்கள், அடிமைகளுக்குக் கீழாக வாழ்ந்து வருகின்றனர். காலை முதல் இரவுவரை அடும்பங்கரையில் உழைத்து வரும் துர்ப்பாக்கியம் பெற்ற பெண்கள்நிறைந்த குடும்பங்களில் என்ன அன்பு, என்ன இன்பம் கிடைக்கும். ஏழைக்குடும்பஙகள் இருக்கும் வரை, மகராஜகுடும்பங்கள் இருக்கும் வரை, இவ்விருகுடும்பங்களில் பெண்களுக்கு சரி சமத்துவம் இல்லாமல் இருக்கும் வரை, உலகத்திலுள்ள எந்த குடும்பமும் சுக முற்று வாழமுடியா! இந்த பொருளாதார வித்தியாசத்தில்தான் உலகிலுள்ளமக்களுக்கு கவலை ஒழியாமலிருக்கின்றது. பணமில்லாத கவலை (திருடர், கொள்ளைக்காரர், கொலைக்காரர் முதலியவர்களால் நேரிடும் பயக்கவலை) பொருளாளிக்கும் இருந்தே வரும். ஒருவன் தயவால் கொடுக்க, மற்ருெருவன் இல்லாமையால் வாங்க, அதாவது, தருமமிடவும், தர்மத்தைப் பெறவும் நேரிடும் துர்ப்பாக்கியம் இந்தப் பொருளாதார வித்தியாசத்தால் தான் பண்டைகால முதல், உலகம் நாசப்பட்டு வந்திருக்கிறது. புருஷன் கொடுக்கவும், பெண் வாங்கவும் நேரிட்ட வித்தியாசமே, ஆணுக்குப் பெண் தாழ்த்தப்பட நேரிட்டது. காலா காலமாக பெண்கள் ஆணுக்கு கீழ்பட்டு இருப்பதற்கு காரணம், இந்த பொருளாதார வித்தியாசத்தால் நேர்ந்துளதென அறிய வேண்டும். இந்த பொருளாதார வித்தியாசம், உலகிலோ, சமூகத்திலோ, இருக்கும் வரை ஆணுக்குப்பெண், தாழ் பணிந்து நடக்க வேண்டி வரும். இந்த பொருளாதார

R34

வித்தியாசத்தை நீக்காமல், ஆணும் பெண்ணும் சரிசமத்துவம் பெறவேண்டு மென்பது வெறும் சொல்லேயாகும். இந்த கோரிக்கை பிறவிக்குருடன் சூரிய தரிசனம் செய்ய கோறும் கதையை ஒக்கும்.

சமதர்ம சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைக்கப்படும், வேலையில் வித்தியாசமிராது. ஆணும் பெண்ணும் சரிசமத்துவமாகவே எந்த வேலையும் செய்ய துணிவுபெருவார்கள். வேலைக்குறிய ஈடும் இருவரும் சரிசமானமாகவே பெறுவார்கள். வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களுக்கெல்லாம் இருவரும் சரிசமத்துவமாக பாத்திர முள்ளவர்களாவார்கள். ஒருவனுக்கு மற்றொருவன் தாழ்ந்து வாங்க வேண்டு மென்பது சமதர்ம சமூகத்தில் கிடையாது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள பொருளாதார வித்தியாசம் தொலைந்தவுடன், பெண்கள் அன்றுதான், தங்கள் பிறப்புரிமைகளாகிய எல்லா சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பெறுவார்கள். அந்த பொருளாதார வித்தியாசம் ஒழியும் வரை, பெண்களின் அடிமைத்தனம் நீங்கவே நீங்கா. மற்ற முயற்சிகள் யாவும் காலப்போக்கே. ஆதலின், சமதர்ம சமூகத்தில் ஒன்றில் தான் பெண்கள் ஆணுடன் சரிசமத்துவம் பெற முடியுமென அறிக.

சமதர்ம சமூகத்தில் ஒன்றில் தான், பிள்ளைகளைப் பெறும் பேற்றை பாக்கியமென சொல்லக்கூடும். மற்ற சமூகங்களில் பிள்ளைகளைப் பெறுதலில் கோடானு கோடி மக்களுக்கு, சுமை (Burden) என்று கூறல் வேண்டும். Children are burden to the Poor. அதாவது, செல்வம் இல்லாதவர்களுக்கு மக்கள் பெறும் பாரமென்றூர் பெரியோர். இல்லாதாள் வீட்டில் கர்பம் தரிப்பது துக்கம். கர்

பம் தரித்தும் கர்பத்தில் வளர்வதும் துக்கம். பெற்ற பிறகும் பிள்ளைகளை வளர்ப்பதும் துக்கம். வளர்த்த பிறகும் கல்வி கேள்விகள் கொடுக்க முடியாததும் துக்கம். இத்யாதி துக்கங்களுக்கு தற்கால தாய்மார்கள் இரையாகின்றார்கள். இந்த சதா துக்கத்திற்கு காரணம் என்ன வெனில், பிள்ளைகளை பெற்று வளர்க்கும் பொறுப்பு, தாய்மார்களுடையதே என்று உலகம் எண்ணிவருவதால், இத்யாதி கஷ்டங்களுக்கு தாய்மார் உள்படவேண்டிவருகிறது. இக் கொடிய மனப்பான்மையை அகற்றி, பிள்ளைகளை பெற்று வளர்த்தல் சமூக பொறுப்பென்ற (Social Responsibility) மனப்பான்மையை ஆதரிக்கும் சமதர்ம சமூக மொன்றில் தான், பிள்ளைகளைப் பெறுவதும், வளர்ப்பதும் தாய் செய்த பாக்கிய மெனலாம். தற்காலத்தில் பிள்ளைகளைப் பெறவும், வளர்க்கவும் செல்வம் பெற்றவர்கள் மிகவும் சிலரே. எல்லா செல்வமும் படைத்த இல்லாளே பாக்கியம் படைத்த தாயாவாள். ஆனால் பொருளாதார சமத்துவம் பெற்ற சமதர்ம சமூகத்தில், எல்லாப் பெண்களும், பிள்ளைகளைப் பெறுவது பாக்கியமென்றே கருதுவார்கள்.

ரஷிய உலகில், கர்பவதிக்கு, பிள்ளை பெறுவதற்கு முந்தியும் பிந்தியும் 6-வாரம் முதல் 8-வாரம் வரை சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கின்றார்கள். விஞ்ஞான மருத்துவம் (Scientific Midwifery) இலவசமாக செய்கின்றார்கள். குழந்தைகள் வளரும் கழகங்கள், nurseries, creche, நாடுமுழுதும் நிறைந்துள. ஒவ்வொரு தொழிற்புரியும் தொழிற்சாலையின் அருகே இந்தக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி, உயர்தரக்கல்வி, தொழிற்கல்வி, தேசியக்கல்வி யாவும் இலவசமே. இந்த சமதர்ம சமூகத்தில் ஒன்றில் தான், குழந்தைகள் அழுவதில்லையாம்! அரசாளும் ஸ்டாலி

னுடைய (Stalin) பிள்ளையாயிருந்தாலும் கைத்தொழில் புரியும் மிலிகாப் (Milikoff) பினுடைய பிள்ளையாயிருந்தாலும் மருத்துவ சிகிச்சை ஒன்றே; வைத்திய முறையும் ஒன்றே; உணவும் ஆடையும் வீடும் ஒன்றே. இந்த காரணங்களாலன்றோ Russia is the paradise for children, ரஷிய நாடு, குழந்தைகளுக்கு குபேரநாடு என்று வழங்குகின்றார்கள். இந்தநாடு ஒன்றுதான் சமதர்ம நாடெனஅறிக.

இந்த பாக்கியத்தை மற்ற உலகம் பெறவே, சமதர்மிகளாகிய நாம் உழைக்க வேண்டும். இதனை விட்டு விட்டு, உலக செல்வங்களனைத்தையும் நாமே அபகரித்துக் கொண்டு, நம்முடைய பிள்ளைகள் மாத்திரம், வளர்வதற்கும், கல்வி, கேள்வி பெறுவதற்கும், கல்லூரிகளை அமைத்துக் கொண்டு, ஏழைமக்கள் பிள்ளைகளை கல்விபெற ஒட்டாமல் அவர்களை கர்பத்தடை செய்யுங்களென்று கூப்பாடு போடுவதா, மானுஷிக தன்மை எனக் கேட்கின்றோம்.

சுருங்க உரைக்கில், சகலருக்கும் போதுமான சமத்துவ உணவு, ஆடை, வீடு, கிடைக்க வேண்டுமானால் அவை சமதர்ம ஆட்சியில் தான் (Socialist Raj) பெற முடியும். தொழிலாளருக்கும், விவசாயிகளுக்கும் ஓய்வு நேரம் கிடைக்க வேண்டுமானால் சமதர்மத்தில் தான் கிடைக்கும். சகலரும் உயர்தரக் கல்வியைப்பெற்று, மூடஜாதி, மூடமத நம்பிக்கைகளிலிருந்து, விடுபடவேண்டுமானால் சமதர்ம ஆட்சிமூலமாகத் தான் முடியும். பெண்கள் ஆணுடன் சமத்துவம் பெற வேண்டுமானாலும் சமதர்மத்தில் தான் அனுகூலப்படும். இனிவரும் சந்ததியாரை, பஞ்சத்தி லிருந்தும் பட்டினியிலிருந்தும், நோயிலிருந்தும், அகால மரணத்திலிருந்தும் விடுவித்து, உலகை அழகு பெறச் செய்யவேண்டுமானால்

அது சமதர்மத்தில் தான் கூடிவரும். நமக்குப்பின்னால் உலகம் ராக, துவேஷ, மோக மற்று, சண்டையற்று, போரற்று, உலகமக்கள் அன்புடன்கூடி வாழவேண்டுமானாலும், சமதர்ம ராஜ்ய மூலமாகத் தான் முடியும். உலகம் இப்பேற்றைப்பெற தற்காலத்தில் வழங்கிவரும் கொடிய பொருளாதார வித்தியா சத்தினை முற்றிலும் மாற்றி, சமதர்ம ராஜ்யத்தை ஸ்தாபித்தல் வேண்டும். தற்காலகொடிய திட்டத்தை மாற்றும் வகையையும், சமதர்ம ஆட்சியினை ஸ்தாபிக்கும் மார்கத்தையும், இனி எடுத்துக் காட்டுவோம்.

# சுயராஜ்யம் யாருக்கு?

## மூன்ருவது அத்தியாயம்.

### சமதர்ம, ஆட்சிமுறை.

#### மாந்தருக்கு, வேண்டியவை.

முன்னிரண்டு அத்தியாயங்களில் சுயராஜ்யப்போக்கையும் சமதர்மத்தின் லக்ஷணங்களேயும் சுருங்க உறைத்தோம். இந்த அத்தியாயத்தில், சமதர்மத்தைக் கோரும் மக்கள் சமதர்ம ராஜ்யத்தை அடைந்தால்தான் இவ்வுலக பேற்றை யாவரும் சமமாக அடைய முடியும் என்பதையும் அதனை யடையும் மார்கத்தையும் சுருக்க விளக்கி காட்டுவோம்.

மக்களுக்கு என்ன வேண்டும்? உணவு, ஆடை, வீடு, கல்வி, வேலே, இவ்வைந்தே. மாந்தருக்கு முக்கியமாக வேண்டியவை இவ்வைந்து அவசியங்களில் வொன்றேனும் போதுமானதாக இல்லாவிடின், மக்கள் வாழ்வு குறைவுபட்ட வாழ்வேயாகும். உலகிலுள்ள 160 கோடி மக்களில், இரண்டொரு கோடி புருஷர்களே இவ்வைந்து அவசியங்களும் மிகுதியாகப் பெற்றுள்ளார். மற்ற 158 கோடி மக்களுக்கு இவ்வைந்தில் யாதேனு மொன்ருகிலும் இல்லாமலிருக்கும். உண்மையில் இந்த பெரும்பான்மை மக்களுக்கு, இவ்வைந்தும் குறைவு பட்டும், இல்லாமலும் வாழ்வுசாதாரணமாக அற்பவாழ்வாகி

யும் துக்கமும் நிறைந்துளது. கடவுள் இருப்பினும் இல்லாவிடினும்; மதங்கள் இருப்பினும், இல்லாவிடினும்; ஜாதி இருப்பினும் இல்லாவிடினும்; உணவு, ஆடை, வீடு, கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம், இவைகள் மக்களுக்கு நிரம்பி இருத்தல் வேணடும். மற்றப் பொருள்கள், மக்களுக்கு அனுவசியம். மற்றவையெல்லாம் இவ்வைந்து அத்தியாவசியங்களுக்குப் பின் செல்பவை. இதனே, "Food, raiment, shelter, knowledge, labour, truth, beauty and love are primary wants of life and all the rest, are either secondary or unnecessary" என்று கூறுவதுண்டு. அதாவது, உணவு, ஆடை, வீடு, கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம், மனித வாழ்வுக்கு முக்கியமானவை, மற்றவையாயும் பின் செல்பவை, அல்லது அனுவசியம் என்று கூறுவர்.

## அரசியல், போக்கு.

உலகில், இதனே அறிந்து, அரசியலே நடத்துவோர் ஒருவருமில்லே. ராம ராஜ்யம், அல்லது பாரத ராஜ்யம் முதல் இந்நாள் வரை, இம்மாபெரும் வாழ்வின் தத்துவத்தை (This great philosophy of life) உணர்ந்து நடந்த அரசு வொன்றேனுமில்லே. சண்டையிலும், போரிலும், கேளிக்கையிலும், வீண் ஆடம்பரங்களிலும், vanities of life, அதாவது, வாழ்வின் வியர்த்தங்கள் என்று கூறும் விஷயங்களில், ராஜ்யங்களே நடத்திவந்தும் வருகிறார்களே ஒழிய, மக்களுக்கு உணவு போதுமா? சுகாதார ஆடை நிரம்ப கிடைக்கின்றதா? சகலரும் மெஞ்ஞானகல்வி அடைந்துவருகின்றார்களா? வீடுவசதிகள் நிறைந்துளவா? தொழில் புரிகின்றனரா? உண்மையாக வாழ்கின்றார்களா? அழகைமதிக்கின்றார்

களா? இன்புற்று வாழ்கின்றார்களா? என்னும் விஷயங்களில், பண்டைகாலமுதல் நாளைவரை, எந்த ராஜ்யமும் கவனத்தை செலுத்திவந்ததில்லை. வேதகாலமுதல், நேற்று புராணகாலம் வரை, உண்டான வேதவேதாந்தங்களும், சாஸ்திர புராணங்களும், நீதிநியாயங்களும், சரித்திர இதிகாஸங்களும், இறந்த பிறகு மோட்க்ஷதிற்கு வழி காட்டிகளாகவும், சிலருடைய சொத்துக்களை பாதுகாப்பதற்கும், வீண்சண்டை வீண் போரில் மக்கள் மாள்வதற்கும், அரசர் அமைச்சர் அவர்கள் சந்ததியார்களின் பெருமைக்கு எழுதப்பட்டிருக்கின்றனவே வொழிய, பொதுமக்கள் உண்ணஉணவு, உடுக்கஆடை இருக்கவீடு, அடையகல்வி, உழைக்கவேலை,முதலிய விஷயங்களில் எந்த சாஸ்திரமும் எந்த வேதவேதாந்தங்களும், மதங்களும், இதிகாஸங்களும் வரைந்திருப்பதைப் பார்த்திலேம்.

## வேதபுராண போக்கு.

வேத புராண போக்கு, பிராமணர், புரோகிதர், மதாச்சாரியார்கள், (Bishops), ஆர்ச்பிஷப்ஸ் (Archbishops), மௌலானக்கள், மடாதிபதிகள் தங்கள் சுக போகங்களுக்கு எல்லாவித சாஸ்திரங்களை உண்டாக்கிக் கொண்டார்களே மாத்திரம், கோடான கோடி பாமரமக்களின் சுக வாழ்வுக்கு வேண்டிய எந்த ஞானத்தையும், தாங்களும் பெறவும்இல்லை; அந்த ஞானத்தை பெற்றுள்ளவர்களை ஆதரிக்கவுமில்லை. எந்த பாதிரி, அல்லது எந்த புரோகிதன், அல்லது எந்தமுல்லா, ஒருகை புல் விளைந்த இடத்தில், இரண்டு கைப்புல் விளைவிக்க, எந்த நூலை இயற்றியுள்ளான்? எந்த மகாத்மா அல்லது எந்த வேதாந்தி பத்து மனிதர் நெய்யும் ஆடையை, ஒருமனிதனால் நெய்யும் எந்திரத்தை கண்டு பிடித்துள்ளான்? இந்த

காலத்திலுமில்லை எந்த காலத்திலுமில்லை ஏன்? இவர்களும் இவர்கள் மரபினருக்கும், உண்ணவும், உடுக்கவும், இருக்கவும், படிக்கவும், சோம்பித்திரியவும், வழி தேடிக் கொண்டிருப்பதாலெனஅறிக. செல்வசம்பத்தை அடைய அதற்கு வேண்டிய வசதிகளாகிய, சட்டதிட்டங்கள், பலவித பாதுகாப்புகள், போலீஸ் பந்தோபஸ்துக்கள், தளகர்த்தர்கள், கோர்ட்டு கொத்தளங்கள் தங்கள் இஷ்டம்போல் அமைத்துக்கொண்டார்கள். ஆனால் மற்ற கோடான கோடி மக்களை, அந்தகார இருளில் வைத்துக்கொண்டு பூசை. நைவேத்தியம், திதி, தெவஷம், விக்கிர ஆராதனை, உற்சவம், கோவில், குளம், அவைகளுக்கு பாணவேடிக்கை முதலிய வீண் ஆடம்பங்களில் உழன்று கிடக்க வேதநூல்களையும், ஆசாரங்களையும், மதவேற்றுமையும், ஜாதி வேற்றுமையும், மூடபக்தி, மூடநம்பிக்கை, மூடபழக்க வொழுக்கங்கள், விக்கிர பூச்சாண்டிகளை அமைத்து கெடுத்து விட்டனர். இத்தியாதி மோசத்தால், பெரும்பான்மை உலகமக்கள், தங்கள், உரிமைகளை மறந்து, அடிமைகளாகி, பசியாலும், பிணியாலும் வருந்தி கிடக்கின்றனர்.

எந்த நாட்டிலும், அரசுபுரியும் ஜாதியாரே எல்லா செல்வாக்கையும், சம்பத்தையும் அடைந்து வருகின்றார்களேயொழிய, சாமான்ய மக்களுக்கு எந்தபாக்கியமுமில்லை. ஏனெனில், சாமான்ய மக்களுக்கு நிகழும் எந்த அரசியலிலும் நேரான ஆதிக்கமில்லாமையாலேன அறிக. ஆதலின் எந்த கட்சியாராயினும், அவர்கள் காங்கிரஸ் கட்சியாராயினும், அல்லது மிதவாதிகளாயினும், அல்லது சமயவாதிகளாயினும், அல்லது வேறு எந்த கட்சியாயினும், அவரவர்கள் கோரிக்கையும் உத்தேசங்களும் Aims and Ideals, நிறைவேற வேண்டுமானால், அரசியல் ஆட்சியைக் கைப்பற்ற

வேண்டும். அரசியலைக் கைப்பற்றினலொழிய எந்த கட்சியும் எவ்வித நன்மையும் யாரும் பெறமுடியாதென அறிக. எனவே, சுயமரியாதையோராயிம் சரி, அல்லது சமதர்மிகளாயினும் சரி, அவரவர் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமாயின், அரசியலில் பெரும்பான்மை ஆதிக்கம் (Majority Rule) பெற வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

## அரசியல் ஆதிக்கம், அவசியம்.

இன்று, பிற்போக்குக்கட்சிகள் உலகமெங்கும் நிறைந்திருப்பது என்னகாரணமெனில், இந்தக் கட்சிகள் அரசியலில் பெரும்பான்மை ஆதிக்கத்தை (Majority Rule) பெற்றிருப்பதாலென அறியவேண்டும். இன்று, முதலாளி கட்சிகள் உலக சம்பத்துகளைப் பெற்றுவாழ்வதும் அரசியல் ஆதிக்கத்தாலென அறிதல் வேண்டும். பஞ்சமர்களும், பாமர மக்களும், உலகசம்பத்தில் சமசெல்வாக்கைப்பேற வேண்டுமானல், இவர்களும் அரசியல் ஆதிக்கத்தைப் பேற வேண்டும். மகாத்மாக்கள் பட்டினி கிடப்பதாலும், இல்லாதார் கோவிலில் நுழைவதாலும், பாமரமக்களை அரிஜன் என்று அழைப்பதாலும், அவர்கள் எவ்வித செல்வாக்கும் செல்வமும் பெறமுடியாது. இவ்வழிகளெல்லாம் பாசாங்கும் பகல் வேஷமென அறிக.

## ஜாதி சமைய மோழிக்கும் வழி.

வெறும்பிரசாரத்தாலும், மகாநாட்டுகளாலும், பாமரமக்கள் சுகவாழ்வைப் பெறமுடியாதெனவும் அறிக. ஜாதியை ஒழிக்க வேண்டுமாயின், அரசியல் மார்க்க வழியாகத்தான் ஒழிக்கமுடியும். அரசியல் திட்டமின்றி, ஜாதி நாட்டைவிட்டு அகலா. ஜாதியை விட்டவர்கள் சில அனுகூலங்களைப் பெற

கடந்த 200 வருஷங்களாகப் பாடுபட்டும், ஆயிரக் கணக்கான பிரசங்கங்கள் செய்தும், தற்காலத்தில் ஜாதிசீர்திருத்தக்காரர்கள் முயற்சியாவும் பயனன்றிப் போயின. ஒன்றும் கைகூடவில்லை. இந்திய சீர்திருத்தக்காரர்கள், தாங்கள் செய்துவந்த பிரசாரங்களோடு அயசியல் உலகை கைபற்றிருப்பார்களேயாமாயின், அவர்கள் கோரி வந்த சீர்திருத்த எண்ணங்கள் யாவும், கைகூடிவந்திருக்கும். இன்றுசாரதாசட்டமொன்றைச் செய்யப்பட்ட பாட்டை நோக்கினல், சீர்திருத்தகாரர்களுக்கு போதுமான அரசியல் ஆதிக்கம் இல்லை என்பது வெளியாகிறது.

மதங்களை ஒழிக்க வேண்டுமாயினும், அரசியல் மூலமாகத்தான் ஒழிக்க முடியும். நேற்று, இந்துமதஸ்தாபன சட்டமும் அரசியல் ஆதிக்கம்பெற்ற, ஜஸ்டிஸ்கட்சியால், நிறைவேறியது. மதத்தை நிலைநிருத்துவதற்காயினும், அல்லது ஒழிக்கவாயினும், எதையும் அரசியல் துரைமூலமாகத்தான் செய்ய முடியும். எத்த நன்மைபெற வேண்டுமானும் அல்லது எந்த தின்மையை செய்யவேண்டுமாயினும்; அரசியல் துறைவொன்றின் மூலமாகத்தான் செய்யமுடியும். அரசியல் ஆதிக்கத்தால் (Political power), உலகைரட்சிக்கவும் கூடும்; அல்லது அழிக்கவும் கூடும். ஆனல் சமதர்மிகள் ஒருவர் தான் இனிஉலகை ரட்சிக்கத்தகுந்தவர்கள். அவர்கள் திட்டமொன்றே உலகப் பசிப்பிணியைப் போக்கவல்லது. ஆதலின் அவர்கள் அரசியலைக்கைப்பற்றல், அத்தியாவசியமென்பது வெளிப்படை. சமதர்மிகள், அரசியலைக்கைப்பற்றும் வரை, மதங்களுக்கும் அழிவில்லை, ஜாதிக்கும் அழிவில்லை, பசிப் பட்டினிக்கும் குறைவில்லை. அன்னுள்வரை கலப்பு மணங்களும், கலப்பு உண்ணுதலும் சொல் மாத்திர அளவே நிற்கும்.

## ஜாதிமத பாதுகாப்பால் வருங்கேடு.

முதலாளி அரசுகள் யாவும், மதங்களையும் ஜாதிசமைய ஆசாரங்களையும், பாதுகாக்கும் தன்மையிலேயே இருந்து வருகின்றன. மூடப்பழக்க வொழுக்கங்களை அனுசரித்தே வருகின்றன. அவனவன் இஷ்டப்படி, மூடநம்பிக்கையில் இருந்து வரலாம் என்று சட்டதிட்டங்களும் செய்துள. இத்யாதி சட்டதிட்டங்களையும் மனப்பான்மைகளையும், அரசியல் வாழ்க்கையிலிருந்து வொழித்தாலொழிய, மக்கள் வாழ்க்கை பரிசுத்தப்படப் போவதில்லை. இதற்காகவே, சமதர்மிகள் அரசியல் துரையில் இறங்க வேண்டுவது அவசியமாகும்.

Freedom of religious worship—அதாவது அவனவன் இஷ்டப்படி தனது தெய்வத்தை வணங்கலாமென்பதை அறவே ஒழிக்க, உலகில் சமதர்மிகள் ஒருவரே கடமைப்பட்டுள்ளார். ஏனெனில், இது, முதலில் சுதந்திரம் ஆகாது. ஒருவன் மூடத்தனத்தில் தான் இருப்பேன் என்பது கொடுமையினும் கொடுமையாகும். இரண்டாவது, இந்த மனப்பான்மையை வைத்துக்கொண்டு, மதச்சண்டைகளும், சமயப் போர்களும் விளைந்து, மக்களை வருத்தி வருகின்றன. மூடபழக்க வொழுக்கங்களும் நிலைத்து வருகின்றன. இந்தப் போலி சுதந்திரத்தைக் கொண்டு கொடுங்கோல் அரசுகள் நீடித்து வருகின்றன. பெரும்பான்மை மக்களுக்கு பகுத்தறிவு தோன்றுமலிருக்கச் செய்து வருவதும் இநதப் போலிசுதந்திரமே. இந்தப் பாழும் சுதந்திரம் பஞ்சமாபாதகத்தை விட பெரும்பாதகமென்றே எண்ணவேண்டும். எப்படி எனில் இந்த, சுதந்திரத்தின் பேரால் அரசுகள் செய்யாத கொடுமை இல்லை. ஆயிரம்வருஷங்களாக கிருஸ்து உலகமும் ,மகமதிய

உலகமும், கொடும்போர் புரிந்து வந்தது இந்தப் போலிமத சுதந்திரத்தின் பேரால் எனவறிக. இன்றைக்கும் நமது நாடு முழுமையும், இந்துக்களும் மகமதியர்களும் தலையை உடைத்துக் கொள்வதும், இந்தக்கொடும் சுதந்திரத்தினலெனவும் அறிக. இவ்விதக்கொடுமைகள் இந்த சுதந்திரத்தின் பேரால் உலகில் நிகழ்வதால், மேல்நாட்டில் தொழிலாலர் அரசு வொன்றே இந்தக் கொடிய சுதந்திரம் அபினிக்கு ஒப்பாகுமென்று, அரசியல் பாதுகாப்புகளை அறவே வொழித்துவிட்டிருக்கிறது. கடவுள் நம்பிக்கை, எல்லா மூடநம்பிக்கைகளை விட மாபெரும் மூடநம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை நமது நாட்டை விட்டு வொழிய வேண்டுமானல், சமதர்மிகள் அரசியல் ஆதிக்கம் பெறவேண்டும்.

அவனவன் ஜாதி அவனவனுக்கு உறியதெனும் பாதுகாப்பையும் உடைத்தெறிய வேண்டும். ஜாதிச்சண்டைகளில் நாங்கள் தலை இடமாட்டோமென்று பசாங்குச் செய்யும் அரசின் மனப்பான்மையைத் திருத்தவும் வேண்டும். Nuetrality in religious and caste matters அதாவது, ஜாதிமத நடு நிலைமை என்பதெல்லாம் ஒருராஜ தந்திரமென அறிக. "எவன் எப்படி கெட்டாலும் என் ராஜாங்கம் நிலைத்திருந்தால் போதும்" என்ற தந்திர மனப்பான்மைக்கு, இதவோர் அடையாளம். ஜாதியும், மதமும், சமதர்மிகளுக்கு, Anathema, அதாவது, விலக்கவேண்டியவைகளாதலால், அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றுலொழிய, இதனை ஒழிக்கமுடியா. (Public life) பொது வாழ்க்கையிலிருந்தும், பொது ரிகார்டுகளிலிருந்தும் (Public Records) ஜாதிப் பெயர்களை நீக்காத வரை, ஜாதி, நாட்டை விட்டு அகலுமென்பது வீண் எண்ணமே. இதனை நீக்க, சமதர்மிகள் அரசியல துறையில் நுழையவேண்டும்.

## பெண்கள், சுதந்திரம் பெறும்வழி.

பெண்கள் சுதந்திரம் பெறுவதற்கும், அரசியல் மூலமாக, சட்டதிட்டங்கள் செய்தாலொழிய, புராணக்கொடும் பழக்கவொழுக்கங்களில் ஆழ்ந்து கிடக்கும் நமது நாட்டுமக்கள், நமதுதேசத்தில், தங்களுக்கு சமத்துவமாக பெண்களை சுதந்திரத்துடன் நடத்தமாட்டார்கள். பெண்களை, நமது நாட்டு மக்கள், அடிமைகளைப் போலவே நடத்த வேண்டுமென்ற மனப்பான்மை ஆண்டாண்டுகளாக குடிகொண்டு வந்திருக்கிறது. அந்தமனப்பான்மை, வெறும்சொற்களாலும், வேண்டுகோளாலும், சாத்திர மேற்கோள்களாலும் நீங்காது. விதவைகள் மறுமணம புரிந்து கொள்ளலாமென்று, அநேக ஆண்டுகளாக பிரசங்கங்கள் செய்து வந்தும், இதன் விஷயமாக, அரசியல் வெளியிலிருந்து ராஜாராம் மோகன்ராய், கேஷப் சந்திரசென், பந்தார்கர், வீரேசலிங்கம்பந்தலு, முதலிய பெரியோர் பாடுபட்டு உழைத்துவந்தும், விதவைகள் மறுமணத்தை தேசம் அங்கீகரிக்கவில்லை. ஆனால், சட்டமூலமாக இரண்டொருவரியால் விதவைகள் மறுமணம் புரிந்து கொள்ளலாம், அதனால் தங்கள் உரிமைகள் யாதொன்றும் போகாதென வரைந்த மாத்திரத்தில், விதவை மறுமணம் சட்டவரம்பிற்குட்பட்டதாயிற்று. இதுபோலவே, ஜாதியை விட்டவர்களுடைய உரிமைகளும், ராஜீய திட்டத்தினால் பாதுகாக்கப்பட்டன. ஆதலினால் இனி சாதி, சமயங்களின் கொடுமைகளை நீங்கவேண்டுமானால், அரசியல் துறையில்தான் இறங்க வேண்டும்.

## மூடநம்பிக்கைகள், ஒழியும் வழி.

மதங்களை ஒழிக்கவும், ஜாதியை நாட்டை விட்டோட்டவும், பெண்மக்கள், ஆணுடன் சகலசமத்துவம்

பெறச்செய்யவும், அரசியல் ஆதரவுவேண்டுமென்ற அவசியத்தைக் குறிப்பிட்டோம். மூடபழக்க வழக்கங்களாகிய, பில்லி, சூன்யம், (Witchcraft and Sorecery) சோதிடம், குறி சொல்லுதல், பிராத்தனை பலிமந்திர தந்திர முதலிய மூட நம்பிக்கைகளினின்று, மக்களை விடுவிக்கவேண்டுமானாலும், அரசுபுரிவோர்களால்தான் செய்யமுடியும். இம்மூடநம்பிக்கைகளால், கோடான கோடி பாமரமக்கள், மந்திரக்காரர், தந்திரக்காரர் செய்யும் மோசத்திற்குட்பட்டு, மெஞ்ஞான சிகிச்சை செய்து கொள்ளாமலே வருஷா வருஷம், லட்சக்கணக்காக வீணே மடிகின்றனர். இவ்வித மரணத்தால், நாட்டிற்கு உண்டாகும் பொருளாதார நஷ்டம் கோடானு கோடி என்று சொல்ல வேண்டும். இந்த மூடநம்பிக்கைகளிலிருந்து மூடமக்களை மீட்பது சமதர்மிகள் கடமையாகும். இந்தக்கடமையை செலுத்த வேண்டுமானாலும், ராஜாங்கத்தால்தான் முடியும்.

இதுவரை, சமூக ஊழல்களாகிய மதம், ஜாதி, மூடநம்பிக்கை, பெண்கள் கஷ்டம் நிலைக்கச் செய்துவரும் பாதுகாப்புகளை, களைய வேண்டிய மார்க்கத்தை சுருங்க எடுத்துக்காட்டினோம். இனி சமதர்மத்திற்கே நேர் விரோதமாயுள்ள பாதுகாப்பினை எடுத்துறைத்து, அதனை நீக்கும்மார்க்கங்களையும் சுருங்க எடுத்துறைப்பாம்.

## தனிவுடமை பாதுகாப்பு.

இனி வரும் நமது இந்திய அரசியல் திட்டத்தில் (Indian Constitution), அவனவன் சொத்து எதுவாயினும் அது பாதுகாக்கப்படுமென திட்டம்செய்துள்ளார். இது அமெரிக்கர் திட்டத்திலிருந்து, நகல் செய்யப்பட்டது. இதுவரை, இந்த திட்டம், இந்தியாவிலாகிலும், அல்லது பிரிட்

டிஷ் அரசியல் திட்டத்திலாகிலும் இல்லை. பொதுவுடமை, உலகில் பரவி வரும் விசைவைக்கண்டு, தனிவுடமைக்காரர்கள், இந்ததிட்டத்தை அவரவர் ஊர்களில் அமைத்துக்கொள்கின்றார்கள் போலும்! ஆங்கிலத்தில், புராண பழமொழி யொன்றுண்டு "Each man for himself, the devil takes the hindermost" அதாவது, அவனவனே தன்னைக் காப்பாற்றி கொள்ளட்டும்; இளைத்தவன் எந்த கதி அடைந்தாலும் அடையபட்டும் என்று இதன் பொருள். இதன் கருத்தை சற்று கவனிப்போம். எந்த விதத்திலாகிலும் பொருள் சேமிக்கப்பட்டாலும், அது மோசத்தானாலும் சரி, வஞ்சத்தாலானும் சரி, பலரைவஞ்சித்தாலும் சரி, கொள்ளை அடித்ததிலானாலும்சரி, கொன்றுலானாலும்சரி, எந்தவிதமாயினும், அவ்வித சொத்து, சேமித்தவனுடையதே. இந்த சொத்தை அரசாங்கமும் தொடப்படாதென்பது இதன் கருத்து. போரில் ஜெயித்த ஊரை பங்கிட்டுகொண்ட நிலமானாலும், நீரானாலும், இதையும் தொடப்படாது. எவன் பங்குக்குவந்ததோ, அவனதல்லாமல், அவனுடைய ஏழேழு தலைமுறையும் அவனது சந்ததியாருடையதாம்! இவ்விதமாகத்தான், தற்போதுள்ள அரசர்களுக்கும் ஜாமீன்தார்களுக்கும், மிராசுதார்களுக்கும், சுரோத்திரியம்தார்களுக்கும், தற்போதுள்ள சொத்தெல்லாம் பாவிக்கப்பட்டுவருகின்றதென அறிக. இவ்வித சொத்துகளின் வருமானத்திலிருந்து சேமிக்கப்படும் சொத்தும் இத்தகையதே. சொந்தக்காரன் அல்லாமல் அவனுடைய சந்ததியாருக்கும் சொந்தமாம்!

ஒன்றுக்கு பத்தாக வட்டி சம்பாதித்து சேர்த்த சொத்தும், தனிவுடமையே. ஒருவேலையும் செய்யாமல், வீட்டு வாடகையால் வரும் செல்வமும் தனிவுடமையே. ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு அரைகூலி கொடுத்து,

தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், இரும்புத் தொழிற்சாலைகள், ரயில் வர்க்ஷாப்புகள், மற்றும் பல Factories, workshops, Shipping yards களில் வரும் லாபமுழுமையும், தனிஉடமையே. கம்பெனிகளென்றும், பாங்குகளென்றும் பலர் சேர்ந்து வர்த்தகம் செய்து சம்பாதிக்கும் லாபமனைத்தும் தனிஉடமையே. பலர் மூலமாக ஒருவன் திரை கடலோடி சம்பாதித்த சொத்தும், தனிவுடமையே. பலர் உழைப்பைக்கொண்டு சேமித்த செல்வமனைத்தும் தனிவுடமையே. பொதுபணத்தால் B.A., M.A., பரிட்சை செய்து, லாயர்களாகவும், ஜட்ஜ்களாகவும், மந்திரிகளாகவும், கலெக்டர்களாகவும், கவர்னர்களாகவும், மற்றும் பல உத்தியோகங்களின் மூலமாகவும் சம்பாதித்த சொத்தும தனிஉடமையே. இவையாவும் தனிஉடமையே. எந்த உழைப்பு மின்றி, அகஸ்மாத்தாக வந்த சொத்தும் ஒருவனுடையதே. பந்தியம் மூலமாகவாவது, சூதாட்டத்திலாவது, அல்லது திருவிளச்சீட்டென்று வழங்கும் லாடரியிலாவது வந்து குவியும் சொத்து ஒருவனுடையதே. இந்த சொத்துகளும் தனி உடமையே.

இவை எல்லா சொத்துகளைவிட, மாபாதகச்சொத்தொன்று உண்டு அது தற்கால நாகரீகத்தில் உண்டானது. அதுயாதெனில், உலகில் சண்டையை கிளப்பிவிட்டு, அதற்காகக் கடன் கொடுத்து, அந்தக் கடனுக்கு வரும்வட்டியால் நிரம்பும் சொத்தேயாகும். இதுவும் தனிசொத்தே.

இத்சொத்துகளின் முக்கிய இலக்ஷணம் என்னவெனில், ஏதோ ஒருவன் அரைவினாடி (A Single Second), உழைத்த உழைப்பாலாகிலும், அல்லது பேனாவைதொட்டு கை எழுத்து செய்தாகிலும் (பேனாவை தொடுவதும் ஒரு உழைப்பே!) அல்லது எந்த உழைப்பின்றி வட்டிக்கு வட்டி

வாங்கினாலும், அல்லது ஒருபைசா செலவிட்டு லட்சகணக்கான லாபம் சம்பாதித்தாலும், அல்லது ஒருமணி நேரம் பேச்சிக்கு ஆயிரம் ரூபாயாகவாங்கி குவித்த குவியலும், அல்லது ஸினிமாவுக்கு முகத்தைக்காட்டி லட்சம் பவுன் சம்பாதித்த செல்வமானாலும், இந்த சொத்துக்கள் யாவும் குவிந்ததற்கு மூலாதாரமாயுள்ள தொழிலாளிகளுக்காகிலும், அல்லது, அவனது சந்ததியாருக்காகிலும் சேருவதில்லை. எவனொருவன் சொந்தக்காரனென்று வழங்கப்படுகின்றானோ, அவன் சந்ததியாரைத்தான் சேரும். பிறந்த தினத்தன்றே கோடீஸ்வரனுக்குப் பிறந்த குழந்தை, அந்த கோடீஸ்வரன் செல்வத்திற்கு உடையவனாகின்றது. இது தனி உடைமையின் முதல் லட்சணம்.

இந்த தனிசொத்தை அதன் சொந்தக்காரன் எப்படி செலவிட்டாலும் இடலாம். கோடானு கோடி பொன்னை அல்லது லட்சக்கணக்கான தின்பண்டங்களை, அல்லது ஆயிரக்கணக்கான பாங்க் ஷேர்களை, கடலில் கொட்டினாலும், கொளுத்தினாலும் அல்லது அழித்தாலும் அழிக்கலாம்! அல்லது குடியிலும், வெறியிலும், கூத்தி வேசித்தனத்திலும், வீண்டம்பங்களிலும், மோட்டார் வண்டிகளிலும், செலவிட்டாலும், இடலாம்!! அல்லது, தனது மோக்ஷத்திற்காக சோம்பேரிகளுக்கும், கோயில் குளங்களுக்கும், சத்திரம், சாவடிகளுக்கும் செலவிட்டாலும் இடலாம்!!! ஆனால் இவ்வளவு சொத்துகளில், பொது மக்கள் கல்விக்காகிலும், சுகாதாரத்திற்காகிலும், வீடு வசதிகளுக்காகிலும், உணவு, ஆடை முதலிய விளை பொருளை அதிக்கப்படுத்துவதற்காகிலும், ஒரு இம்மி அளவேனும் செலவு செய்ய கட்டாயப்படுத்த முடியாதாம். பைத்தியக்காரனொருவன், தனது செல்வத்தை, கடலில் கொட்டினாலும், அதனை ஏன் என்று கேட்

கப்படாதாம்! இது இந்தத் தனிஉடமையின் இரண்டாம் லட்சுணம். இவ்விதமாக உலக முழுமையுமே, இந்தத் தனி உடமை காக்கப்பட்டு வருகிறது. இந்த பாதுகாப்புக்குத் தான் இருக்கும் எல்லா போலீசும், மேஜிஸ்டிரேட்டுகளும், கோர்ட்டு கச்சேரிகளும், லாயர், ஜட்ஜிகளுமென அறிக! இந்த சோத்துகளை பாதுகாப்பதற்குத்தான் இருக்கும் எல்லா ஜெயில்களும், ஜெயில் சூப்பிரிண்டேண்டுகளும், ஜெயில் வார்டர்களுமெனவும் அறிக!!

## தனிஉடமையை உபயோகிக்கவேண்டிய விதம்.

இத்யாதி தனிச் செல்வம் உலகில் எவ்வளவு இருப்பதாக கணக்கிட்டிருக்கின்றார்களென்றால், உலகிலுள்ள 160 கோடி ஆண் பெண்மக்கள் ஒவ்வொருவருக்கும், போதுமான உணவும், சீராக உடுத்திக்கொள்ள ஆடையும், சுகாதார வீடும், விஞ்ஞானக் கல்வியும், அதற்கு மேல் உயர்தர வாழ்வுக்கு வேண்டிய சாகவாசம் அளிக்கக் கூடிய உலக செல்வமென பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்து தெரிவிக்கின்றார்கள். இதன்றியும், குழந்தைகளுக்கு வேண்டிய பாலும், உயர்தர வாழ்வுக்கு வேண்டிய மின்சாரவிளக்குகளும், வீடுகளில் மேஜை, சோபா, நாற்காலி முதலியவைகளும், பீங்கான் கோப்பை, வெண்கல பாத்திரங்களும், ஒவ்வொரு கிராமத்திலும் கேட்டு ஆனந்திக்க ஆகாய தொனிகளும், உலகிலுள்ள தனிசொத்திலிருந்து அமைக்கக்கூடும். ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், புஸ்தகசாலைகளும், வாசகசாலைகளும், நந்தவனங்களும், மியூசியங்களும், கண்காட்சிசாலைகளும், அமைக்கவும் கூடும். உலக மக்கள், உலக முழுமையும் இலவசத்தில் யாத்திரை செய்ய கப்பல், ரயில் மோட்டார், ஆகாயரதம் முதலிய வசதிகளை உண்டாக்கக்

கூடும். இன்று சிலரிடம் வீணேகுவிந்து கிடக்கும், வீணே செலவிடப்படும், வீணேதுர்விநியோகப்படும் தனிசொத்து களால், உலகிலுள்ளமக்கள் வாழ்வுக்கு வேண்டிய முக்கிய சுகபோகங்களை அனுபவிக்கலா மென்றால், இவ்வளவும் சிலரால் நாசமாக்கப்படும் காட்சி எவ்வளவு விசனிக்கத்தக் கது. இவ்வளவு நன்மை பயக்கக் கூடிய சொத்துகள் யாவும், நூற்றில் இரண்டு பேர்வசமே குவிந்து கிடக்கின்றன. ஆனல் இவ்வளவுசெல்வத்திற்கும் மூலகாரண கர்தாவாயிருக்கும் நூற் றுக்கு 98 பேர் பசியால் வருந்தவும், பிணியால் சாக நேரிடு கின்ற துர் பாக்கியம் மிகவும் சகிக்க முடியா திருக்கின்றது. நேற்று நடந்த மகாயுத்தத்தில், குண்டு பீரங்கிகளால் சாம்ப லான உயிர்களைக்கொண்டும், செல்வங்களைக்கொண்டும், உலகி லுள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்ரா நிலமும், அதற்கு வேண்டிய விதையும், கலப்பை முதலிய ஆயுதங்களும் அமைத்துக்கொடுக்கக் கூடுமாம். இதன்றியும் மேஜை நாற் காலியுடனும் சமையல் பாத்திரங்களும், தீபங்களும் நிறைந்த வீடுவொன்றை ஒவ்வொருவனுக்கும் கட்டிக்கொடுக்கலாமாம்! 60 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு வயது சென்ற ஒவ் வொருவனுக்கும் (old age pension) என்று கூறப்படும் தள்ளாதார் உதவியை உதவலாமாம். ஒவ்வொரு கிராமத்தி லும் குழந்தைகளை சுகாதார விதிப்படி வளர்க்க, சிசுரக்ஷண விடுதிகளை அமைக்கலாமாம்! ஒவ்வொருமக்களும், பால், தயிர், வெண்ணை, உண்ண சௌகரியங்களை ஏற்படுத்தலாமாம். இவ்வளவு சுகபோகங்களை அளிக்கக்கூடிய செல்வத்தை 4 வருஷ சண்டையில் கரியாக்கிய அரசுகள், ஒவ்வொன்றிற்கும் அந்த சண்டை செய்ய என்ன பித்தம் பிடித்ததோ, அது யாருக்கும் விளங்க வில்லை.

இவ்வித உன்மத்த அரசுகளால், பாரத இராமாயண

கால முதல், நாளது வரை, உண்ணவேண்டிய உணவுகளும், இருக்கவேண்டிய வீடுகளும், அனுபவிக்க வேண்டிய மற்ற சுகபோகங்களும், வருடா வருடம் சம்பாலாய் போகின்றன. இதற்கெல்லாம் முதற்காரணமாயுள்ளது, இந்த பாழும் தனிவுடைமையே!

## போதுவுடமை விளக்கம்.

இவ்வளவு உலகை வியர்தத்திற்கு காரணம் தனிவுடமையென்றால், அதற்கு என்ன சந்தேகம? அதனை ஒழிப்பதற்காகிலும், அல்லது மாற்றுவதற்காகிலும் என்ன வழி? ஓரே வழிதான் உண்டு. அது யாதெனில் பலருக்கு உபயோகப்படவேண்டிய செல்வத்தை, பலருக்கு உபயோகப்படாமல் சிலரால் துர் உபயோகப்படும் சொத்துகளனைத்தையும், பலருக்கு உபயோகப்படும்படி செய்வதேயாகும். நிலத்தில் விளையும் செல்வமனைத்தும், நிலத்திற்கு சொந்தகாரனால், அல்லது அவனுடைய சந்ததியாரால், துர் விநியோகப்பட்டு வருகின்றது. நிலத்தில் வெட்டி எடுக்கப்படும் பொன், வெள்ளி, கரி, இரும்பு, முதலிய உலோகங்கள் யாவும் சிற்சிலரே சொந்தமாக்கிக்கொண்டு, மற்றவர்களுக்கு உதவாமல் தாங்களும் தங்களது சந்ததியாரும் வீணே உபயோகித்து வருகின்றார்கள். ஆனால், இந்நிலங்களை இவர்கள் உண்டாக்கினார்களில்லை. பிறக்கும் போது கொண்டு வந்தார்களில்லை. இறந்தும் கொண்டு போவது மில்லை. இவர்களில் யாரேனும் இந்த செல்வங்களை உண்டாக்க உழைப்பதுமில்லை. ஆனால் "சொந்தம்" (ownership), என்ற வெறும் பழக்கச் சொல்லைக்கொண்டு (mere word of habit), அந்நிலங்களில் விளையும் செல்வங்களை துர் விநியோகித்து வருகின்றார்கள். இந்த துர்ப் பழக்கத்தை நிறுத்த வேண்டுமானால், விளையும் நிலங்களையும், தோண்டப்

படும் சுரங்கங்களையும், பொதுவுடமையாக்க வேண்டும். அதாவது, பலருக்கு உபயோகப்படும்படி நிலங்களை பொது மக்களால் உழுது பயிரிட்டு, அதில் விளையும் தானியங்களை பொதுவாக அந்தந்த கிராமங்களிலும், அந்தந்த பட்டணங் களிலும், களஞ்சியங்களில் சேமித்து, மக்கள் வயிர் நிறம்ப உண்ணுவதற்கும், உடுப்பதற்கும், வீடு வாசல் கட்டுவதற்கும், விநியோகப்படுத்தல் வேண்டும். ஆனல் இதன் சொந்தக் காரர்களாகிய நிலஞ்சுவான்தார்களும், அரசர்களும், ஜமீன் தார்களும், மிராசுதார்களும், சுரோத்திரயம்தார்களும், எப்படிப் போவதென்று கேட்கலாம். இவர்களும் இந்த பொது வுடமை திட்டத்தில் மற்றவர்களைப்போல் கவலையாதொன்று மின்றி, 4 மணிநேரம் மற்றவர்களைப்போல் உழைத்து, தாங் களும், தங்களது பிள்ளைகளும், தங்களது சந்ததியார்களும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டாக உண்டு களித்து வாழ லாம். ஆனல் ஒன்று மாத்திரம் இவர்கள் ஆதிக்கத்திலிருந்து எடுக்கப்படும். அதாவது தங்கள் இஷ்டம் போல் செல்வங்களை நாசப்படுத்தி வரும் ஆதிக்கத்தை இவர்களிட மிருந்து நீக்கப்படும். நிலம் நீர் உள்ள தனிவுடமையை பொதுவுடமையாக்க வேண்டுமானல், அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களால் தான் முடியும். இதற்காகவே சமதர்மிகள் அவரவர்தேசத்தில் அரசியல் ஆதிக்கம் பெறல் வேண்டும்.

உலக தொழிற்சாலைகள் ஒரு சிறு பான்மையோரால் அந்தந்த நாட்டில் சொந்தமாக்கப்பட்டு அவர்கள் இஷ்டம் போல் நடத்தியும், நிறுத்தியும் வருகின்றார்கள். இந்த தொழிற்சாலைக்கு சொந்தமானவர்கள் ஆயிர உலகமக்களில், ஒருவர் கூட இல்லை. ஆனல் 999 பேர், 7, 8, 9, 10 மணி நேரம் உழைக்கவும், ஒரு சொந்தக்காரன் அதன் லாபத்தை அடையவும், தற்கால தனிஉடமை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த தொழிற்சாலைகளை, அவைகளின் சொந்தக்காரர்கள் கொண்டு வந்த முதலென்பார்கள். இந்த முதல் இல்லாமற் போனால், எதுவும் செய்யமுடியாதென்பார்கள். ஆனால் அந்த முதல்யாது? நிலம், நீர், இரும்பு, கரி, முதலிய இயற்கை சொத்துகள் மனிதன் உலகில் தோன்றுவதற்கு முந்தியே இருந்துவருகின்றன. அதனை பல மனிதர்கள் எடுத்து பாகுபடித்தி, வேலைசெய்து வீடுகளாகவும், தொழிற்சாலைகளாகவும், எந்திரங்களாகவும், ரெயில்களாகவும், கப்பல்களாகவும், மற்றும்பல கைத்தொழில் கருவிகளாகச்செய்த பிறகன்றோ, அவை முதலாகின்றன. தற்செயலாக ஒருவன் ஆதிக்கத்தில் அம்முதல் வந்து விட்டால், அவைகளை தனதென்று பாராட்டு கிறான். இந்த பாராட்டலை எதிர்க்காமல் பாமரமக்கள் அவனிட்ட கூலியை பெற்றுக்கொண்டு, முதல் முதலைக்கொண்டு பல முதலை செய்து கொடுத்துவருகின்றார்கள். உண்மையில், எல்லாவித முதலும் இயற்கைப்பொருள்களே. அம்முதலைக் கொண்டு பலபேர் உழைப்பால் வீடுவாசல்களாகவும், கப்பல், ரயில், பொன், வெள்ளி, தொழிற்சாலை முதலிய பண்டங்களாக செய்யப்படுகின்றன. எனவே உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் அவைகளை பண்படுத்தினவர்களுக்கே உரியது. இது தான் சமதர்மஞாயம். ஆதலின் இந்த சொத்துக்களை பொதுவுடைமையாக மாற்றுவதில், எவ்வித குற்றமும் இல்லை. இது தர்மமேயாகும். கைத்தொழிலுக்குறிய பண்டங்கள் பொதுவுடைமையாக பாவிக்கப்படுமேயானால், அதனால் உண்டாகும் பயன் அனைத்தும் அதில் உழைப்பவர்களுக்கே சேரும். இந்த சொத்துகளுக்குச் சொந்தக்காரன் என்போரும், மற்ற உழைப்பவர்களைப்போல் தாங்களும் ஒருவராக இருந்து உழைத்து, எந்த விசாரமும் இன்றி உண்ணலாம். இதுதான் உத்தமபுருஷருக்கு அழகாகும்.

உலகத்திலுள்ள தனிஉடமை தொழிற்சாலைகளை, பொதுவுடமை தொழிற்சாலைகளாகமாற்ற, அரசியல் ஆதிக்கம் பெறவேண்டுமாகையால், சமதர்மிகள் அந்த ஆதிக்கத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

விளைவுக்கு வேண்டிய நிலங்களும், கைத்தொழிலுக்குறிய தொழிற்சாலைகளும், போக்குவரத்துக்குறிய ரயில், கப்பல், மோட்டார்வண்டிகள், இவையாவும், தந்தி தபால் ஸ்தானங்களைப்போல் பொதுவுடைமை (common ownership) யாக ஆக்கி, இந்தஸ்தாபனங்களில் உழைத்துவரும் கிருஷிகர், தொழிலாளர் ஆட்சி உட்பட்டு இவைகளின் வருமானங்கள் யாவும் பொதுமக்களுக்கு உபயோகபடுத்தினலொழிய, உலகப்பசி, பிணி, அறியாமை, நாட்டை விட்டாகிலும், உலகை விட்டாகிலும், நீங்கப்போவதில்லை.

சமதர்ம ஆட்சியில், நாட்டிலுள்ள செல்வமனைத்தையும் ஐந்து முக்கிய விஷயங்களுக்கு விநியோகிக்கப்படும்.

(1) வேலைசெய்ய சக்தியுள்ள நாட்டுமக்கள் எல்லோருக்கும் வேலை உண்டாக்கி, அவர்கள் உணவுக்கு வேண்டிய பொருள்களை கொடுக்கப்படும்.

(2) உழைக்க முடியாத வயது சென்றவர்களுக்கும், குழந்தைகளுக்கும், உணவு முதலியவைகளை கொடுத்து ஆதரிக்கப்படும்.

(3) கர்பமான பெண்கள் யாவருக்கும் இரட்சணிய உதவி புரியப்படும்.

(4) மெஞ்ஞானக் கல்வியாவரும் பெரும்படி மெஞ்ஞானஸதாபனங்களும், கல்விச்சாலைகளும், கல்லூரிகளும் ஸ்தாபிக்கப்படும். யாவரும் உண்மை பேசவேண்டுமானல் உயர்தர பயிற்சி (culture) பெறச்செய்ய வேண்டும்.

(5) யாவரும் உயர்தரவாழ்வை அநுபவிக்கும் படியாக, நாடு முழுமையும் நகரமென்றும், கிராமமென்றும், வித்தியாசமின்றி, எவ்விடத்தும் வாத்தியம், சங்கீதம், ஆகாயத்தொனி, மின்சார விளக்குகள், சுகாதார ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரிகள், குழந்தை வளர்க்குமிடங்கள், மியூசியங்கள், நந்தவனங்கள், படக்காட்சிகள், தோட்டங்கள், கண்காட்சிசாலைகள், முதலியவைகள் ஸ்தாபிக்கப்படும்.

இவ்வித வாழ்வின் அத்தியாவசியங்களுக்கு வேண்டிய செல்வம், பொதுநிலநீர் மூலமாகவும், தொழிற்சாலை மூலமாகவும், போக்குவரத்து மூலமாகவும், வர்தக மூலமாகவும், விளையும். பொருளாதார நிபுணர் எடுத்திருக்கும் கணக்கின்படி உலகில் விளையும், செய்யப்படும் பொருள்கள் விஞ்ஞான முறைப்படி விளைவித்தும், செய்யும் பட்சத்தில், தற்கால 160 கோடி உலகமக்கள் 1600 கோடி ஆனபோதிலும், அவர் சாதாரண வாழ்விற்கு வேண்டிய உணவுப்பொருள்களும், உயர்தரவாழ்விற்குறிய கல்வி, கேள்வி, சாகவாசம், சங்கீதம், பாடல் முதலியவைகள் போதுமான வரையில் அடையக்கூடுமாம். வேண்டுமென்ற கவலையேயாருக்கும் இல்லாமல் போகும். எனது பிள்ளை குழந்தைகள் "என்ன கதியாம்" என்ற விசாரம் உலகை விட்டு ஒழிந்தே விடும். பஞ்சம், கொள்ளைநோய், அகாலவியாதி, அகாலமரணம், நாட்டினின்று நீக்கப்படும்.

## முடிவு.

தற்கால உலகம், பொது சொத்தாக இருக்கவேண்டிய செல்வத்தை அவனவன் சொந்தமாக்கிக்கொண்டு, அவனவன் இஷ்டப்படிகையாண்டு வருவதால், உலகமக்களுக்கு, உலக செல்வத்தை சம்பூர்ணமாக அனுபவிக்க முடியாமல்

போகின்றது. அவனவன் இஷ்டப்படி, அவனவன் வருமானத்தை செலவிடுகின்றான். அதனை நிகழும் தனி உடமை திட்டத்தில் அடக்குவாரில்லை. இந்ததனிவுடமை திட்டத்தில் அவனவன் சொத்தென்று, அவனவன் செல்வமென்று வாதப்பிரதிவாதம் செய்கின்றபடியால், கோர்டுகள் வேண்டியிருக்கின்றது; ஜட்சுகள் வேண்டியிருக்கின்றது; லாயர்கள் வேண்டியிருக்கிறது. இவ்வித வழக்குகளால் பலபேர் உழைப்பால் வந்த செல்வமனைத்தும், சோம்பேரிகளுக்கு விநியோகிக்க உதவுகின்றது. இதற்கு திருஷ்டாந்திரம் வேண்டுமானால், ஒருகாலத்தில் தனிசொத்தாக இருந்த பல சிறியசொத்துகளை, முனிசிபாலிட்டியும், ஜில்லாதாலுக்கா போர்டுகளும் பொது சொத்தாக மாற்றிகையாண்டுவருவதை பார்க்கலாம். முனிசிபல் கட்டிடங்கள், ரோடுகள், வாராவதிகள், முனிசிபல் விளக்குகள், சாக்கடை, கால்வாய்கள், குழாய் தண்ணீர் வசதிகள், முனிசிபல் பள்ளிக்கூடங்கள், நந்தவனங்கள், மியூசியங்கள், ஆகாய தொனிகள், ஓட்டல்கள், பாலங்கள், மின்சார விளக்குகள், முனிசிபல் ரயில்வேக்கள், டிராம்கள், பஸ்கள், கக்கூஸ்கள், முதலிய சிறிய சொத்துக்கள் யாவும் பொதுவுடமையாக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், தனிவுடமைகாரர்களாகிய முனிசிபல் ஜில்லா தாலுக்கா போர்டு உத்யோகஸ்தர்கள், சேர்மன், வைஸ்சேர்மன், கமிஷனர், பிரசிடெண்டு, வைஸ்பிரசிடெண்டு, ஹெல்த் ஆபீசர், இன்னும் மற்ற சிப்பந்திகளின்மனப்பான்மையால் பொதுமக்கள் இத்தியாதி சொத்துகளின் முழுப்பயனை அனுபவிக்கமுடியாமற் போகின்றது. இருந்தாலும், இத்யாதிசொத்துகளின் பேரில் வழக்கில்லை, வில்லங்கில்லை, சண்டை சச்சரவில்லை, வாதப் பிரதிவாதமில்லை, உனது எனதென்ற வித்தியாசமில்லை, வியாஜியமில்லை, யாவருக்கும் பொதுவாகவும் கருதப்படுகின்றன, யாவருக்கும் பொதுவாக பரிபாலித்து வரப்

படுகின்றன, யாவருக்கும் பொதுவாக உபயோகப் படுகின்றன. இந்த விஷயங்களில் யாதாகிலும் குறைவு இருந்தால், தனிவுடமைக்காரர் பரிபாலத்தின் தோஷமே ஒழிய, பொதுவுடமையால் யாதொரு தோஷமுமில்லை.

பொதுவுடமை மனப்பான்மையோடு இந்த சொத்துகளை பரிபாலிப்போர் (Adminstrators) களால் நிர்வகித்து வரும் பக்ஷத்தில், நகரவாசிகளும் கிராமவாசிகளும், இதினினிலும் பதின் மடங்குசுகப்பட்டு வாழ்வதற்கு தடையில்லை.

பொதுவுடமை, உலகிற்கு புது விஷயமல்ல. சிற்சில பெரிய சொத்துகளும், அரசாங்கவர்க்கத்தினரால் பொதுவுடமையாக இன்றைக்கும் கையாளப்பட்டு வருகின்றன. கல்லூரி கட்டிடங்கள் (University buildings), சர்க்கார் கட்டிடங்கள், பெரிய கால்வாய்கள் (big canals), ஏரிகள், மடுவுகள், தந்திதபால்கள், காடுகள் (Forests), சேனை சிப்பந்திகள், ஆயுதங்கள் இவைகள் யாவும் பொதுசொத்துகளாகவே பாவிக்கப்பட்டும், உபயோகிக்கப்பட்டும் வருகின்றன. இந்த சொத்துகளின் வருமானங்களும், உபயோகங்களும் யாவருக்கும் ஏறக்குறைய பொதுவாகவே உபயோகத்திற்கு உதவும்படி இருக்கின்றன. சிற்சில உத்யோகஸ்தர்களுக்கு சர்க்கார், முனிசிபாலிட்டி, தாலுக்கா ஜில்லா போர்டுகளால் கட்டிக்கொடுத்திருக்கும் வீடுகள் பொதுவுடைமையாக பாவிக்கப்பட்டு, வாடகையாதொன்று மில்லாமலே உத்தியோகம் புரியும் மக்களுக்கு உபயோகப்பட்டு வருகின்றன. இதேபிரகாரம் தனியுடமையாக பாவிக்கப்பட்டு வரும் சொந்தக்காரர்களுடைய வீடுகள், பங்களாக்கள், தோட்டம் துறவுகளும் பொதுவுடமையாக்கப்பட்டு, அவரவர்வசிப்பதற்கு போதுமான அறைகள் (apartments) வகுத்து கொடுக்கும் பட்சத்திலும், வீடு போதாமைக்கு இன்னும் பலகோடி வீடுகளை

பொதுவாக கட்டுவித்தும், மற்றெல்லாவற்றையும் பொதுவாக பாவிக்கப்படும் பட்சத்தில், என்ன கஷ்டமென்று கேட்கின்றோம்! ஐந்து லக்ஷம் போர்வீரர்களுக்கும், லக்ஷம் சேவகர்களுக்கும் தங்கிவாழ பொதுவீடுகள் அமைக்கப்பட்டு இருக்கின்றபோது, வீடில்லாமல் தவிக்கும் 30 கோடி மக்களுக்கு தங்கிவாழ ஏன் பொதுவாக அமைக்கக்கூடாது. இந்த மாதிரியாகவே ரயில்களும், கப்பல்களும், தொழிற்சாலைகளும், பாங்குகளும் பொது சொத்தாக பாவிக்கப்படும் பட்சத்தில், இவைகளில் விளையும் ஏராளமான திரவியம் சிறுபான்மையோராகிய, முதலாளிகளுக்கும், அவர்களுடைய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும், லட்சலட்சமாக போகாமல், பெரும்பான்மையான பொதுமக்களுக்கு உதவுமன்றோ! இத்பாதி பெரும்சொத்துகள் பொதுவுடமை ஆக்கப்படின், தனி சொத்தாக அவைகள் இருக்கும்பொழுது அவைகளின் பேரில் ஏற்பட்டுள்ள கோடானகோடி கடன்களும், பொதுவாகதள்ளி விடப்படுமன்றோ! எனவே பசிப்பிணியாலும், வேலையில்லாமையாலும், வாடிவதங்கும் கோடானுகோடி மக்கள் கவலையற்று சுகம் பெறவேண்டுமாயின், தனி சொத்துகளாக பாவிக்கப்படும் நிலம், நீர், தொழிற்சாலைகள், பாங்குகள், ரயில்கள், கப்பல்கள், டிராம்வேக்கள், மின்சாரவசதிகள், பெரிய வீடுகள், கோவில் சொத்துகள், மதஸ்தாபனங்கள், யாவும் பொதுவுடமையாக ஆளப்படவேண்டும். தற்கால இராஜியங்கள், மனிதனை ஆண்டுவருகிறார்கள். ஆனால் பொதுவுடமை இராஜியத்தில், அதாவது சமதர்ம இராஜியத்தில், விளை பொருள்களும், செய்பொருள்களும் ஆளப்படுமென அறிக. அன்று தான் மக்களை பிடித்தாட்டும் துக்கம் நிவர்த்தியாகுமென அறிக. ஆதலின் சமதர்மிகள், செய்பொருள், விளை பொருள்களை ஆளும் ஆட்சியை கைப்பற்றுவார்களாக!

Gnana [illegible]dithar Press, Kri[illegible]pet, Triplicane, Madras.

17785